துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

நன்னெறி

1923

பெங்களூர், ஸி. ஆர். ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதராயிருந்த
எசனூர். அரங்கநாத முதலியார்
இயற்றிய

விருத்தியுரை

10 MAY 1924

THE GENERAL BUSINESS COY.
THOUSAND LIGHTS, CATHEDRAL P.O.
MADRAS

1923

O-,1KSP,N
N23
178531

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

நன்னெறி

பெங்களூர், ஸி. ஆர். ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதராயிருந்த

எசனூர். அரங்கநாத முதலியார்

இயற்றிய

விருத்தியுரை

10 MAY 192

THE GENERAL BUSINESS COY.

140, THOUSAND LIGHTS, CATHEDRAL P.O.

MADRAS

—

1923

Copy right registered]

[Price 7 annas

Printed at the following Presses—

The Good Shepherd Convent Press, Bangalore

Formes A, 1—4, 7 *and Title page*

The Bright & Co., and Empress Jubilee Press, Bangalore

Formes 5—6 *and* 8

The Sadu Press, Madras

Formes 9—10½

10 MAY 1924

Extracts from Select Opinions :

:o:

1. M.R.Ry. T. M. Mohideen Kavirayer, Lecturer in Tamil, U.T. College, Bangalore, writes "The annotations on 'Nanneri Venba' by Tamil Pandit A Runganatha Mudaliar, are on up to date lines and have been adapted with the double view of rendering the study easy to the smart learners and giving an invaluable help to such as are not well grounded in Tamil."

2. M.R.Ry. P. R. Singarachari, M.A. Lecturer, St. Joseph College, Bangalore, writes "The commentary on 'Nanneri' by Mr. A. Runganatha Mudaliar is novel and his analysis original."

3. M.R.Ry. K. Kuppuswamy Mudaliar, B.A., Hony. Secy., The Dravidian Research Institute, Madras, writes "The exhaustive commentary for the 'Nanneri' by Tamil Pandit A. Runganatha Mudaliar, is very interesting and instructive. If it can be used in various schools there is no doubt that the knowledge of the students in regard to Tamil will be very much better than it is at present."

4. M.R.Ry. P. V. Ramanujacharya, B.A., L.T., Christian College School, Madras, writes "The commentary of 'Nanneri' by Mr. A. Runganatha Mudaliar is exhaustive from the stand point of the form or class in which the book may be safely used. It gives an insight into all the grammatical points which the pupil has to learn. I would strongly recommend the book as one suitable to be placed in the hands of the intelligent pupils and also of the teachers dealing with the subject."

5. M.R.Ry. S. Venkatarama Iyer, Dy: Inspector of Schools' (George Town Range) Madras, writes "I have great pleasure in testifying to the merits of the notes &c., on 'Nanneri' published by Mr. A. Runganatha Mudaliar, Tamil Pandit in St. Gabriels' High School, Madras. The author has, I may say, laid the student population under obligation by this publication. There are several novel features which shew the care bestowed on the work. The notes, the grammatical points, the explanations of allusions all seem to be of just the kind required to enable the student to understand the poems properly."

---

6. ஸ்ரீமத் - கோ. வடிவேல் செட்டியாரவர்கள்,

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,

இந்து தியலாஜிகள் ஐஸ்கூல், சென்னை.

"தற்கால பாடசாலை போதனா முறைக்கேற்ப, ஸ்ரீமத் - எ. அரங்கநாத முதலியாரவர்கள் எழுதிய நன்னெறியின் உரை மாணவர்க்குப் பெரிதும் பயன்றருமாறு அமைந்துள்ளதென்பது எனது அபிப்பிராயம்."

---

7. ஸ்ரீமான். கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள்,

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,

பச்சையப்பன் காலேஜ் ஐஸ்கூல், சென்னை.

"ஸ்ரீமான். எ. அரங்கநாத முதலியாரவர்கள் புதிய முறையைத் தழுவி நன்னெறிக்குச் சிறந்ததோர் உரையெழுதி யிருக்கின்றனர். இவ்வுரை நன்னெறிச் செய்யுட்கள் ஒவ்வொன்றையும் மாணவர் மனத்திற் பசுமரத்தாணிபோல் நன்கு பதியும்படி செய்யக் கூடியதாமென்பது என்னுடைய கருத்து."

முகவுரை

நன்னெறி என்பது உபமான உபமேயங்களுடன் நீதிகளைக் கூறும் நூல்களிலொன்றாகும்.

இது காப்புச்செய்யுளொன்றும், நூற்செய்யுட்கள் நாற்பதுமாக நாற்பத்தொன்றுசெய்யுட்களாகத் திரட்டித் துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளாற் சொற்சுவையும் பொருட்பொலிவும் பொருந்தப் பாடப் பெற்றது.

இந்நூல் உரையுடன் வெளிவந்துளதெனினும், துரைத்தனத்தாராற் பரிபாலிக்கப்பெற்ற பாடசாலைகளில் மத்தியதர வகுப்பு மாணவர்கள், இனிது கற்கவேண்டுமென்னுங் கருத்துட்கொண்டே, என்சிற்றறிவிற்கெட்டியவாறு மூல பாடத்திற் சிலசெய்யுட்களிற் பயிலவழங்காத சொற்கள் சில வற்றை விலக்கி, அவ்வவ்விடத்திற்குப் பொருத்தமான வேறுசிலவற்றை அமைத்தும், பொதுமத்திய போதன முறையைத் (Concentric Method of Teaching) தழுவிச் சில குறிப்புக்களுடன், எளியநடையில் உரையொன்றை இயற்றியும், இந்நூலை வெளியிட்டனன்.

எதிர்பாராத சிலவேலைத்தொல்லைகளான், யான் பல முறை வெளியூர்களுக்குப் போகநேர்ந்ததாதலின், இப் பதிப்பை ஒரே அச்சுயந்திரசாலையிலச்சிட இயலாமற் போயிற்று; எவ்வாறாயினும், பிரதிகளைக் குறித்தகாலத்தில் வெளியிடல் வேண்டுமெனக் கருதியே வெவ்வேறு சாலை களில் ஒவ்வொரு பகுதியாகப் பதிப்பித்தனன்.

இதில் குற்றங்குறைகள் இருப்பின், அவை அனைத்தையும் பேரறிஞர் பொறுப்பது பெருமை; என்றாலும் மாணவர்க்குப் பயன்படுமெனத் தோன்றுந்திருத்தங்களை எவரேனும் அன்புகூர்ந்து அறிவிப்பரேல் அவற்றையும் மறுபதிப்பில் வெளியிடுவதுடன் அன்னவர்பக்கல் யான் என்றும் நன்றிபாராட்டுவன்.

எ. அர:

பொதுக்குறிப்பு

நன்னெறியென்பது உபமான உபமேயங்களான் நீதிகளைக்கூறும் இடைக்காலத்து நூல்களிலொன்றும்; இந்நூற் செய்யுட்கள் ஒவ்வொன்றும் இருவிகற்பத்தாலாகிய நேரிசை வெண்பாவாலாக்கப்பட்டது.

உபமானமாவது—ஒருவற்குத் தெரிந்த விஷயத்தைக் கொண்டு தெரியாதவேறொரு விஷயத்தை அவற்கு எளிதாகத்தெரியப்படுத்தும் பொருளணியின் ஓர் உறுப்பாம்.

உ-ம்:—"புலிக்குட்டி பூனையைப் போலிருக்கும்." இதில், புலிக்குட்டியை எப்போதாகிலும் பார்த்தறியாத ஒரு சிறுவன், தான்பலமுறைப் பூனையைப் பார்த்துவருகிற அந்த அறிவைக்கொண்டு அப்புலிக்குட்டியின் உருவத்தைத் தன் மனத்தினால் யூகித்து அறிகிறான். இங்கே, சிறுவனுக்குத் தெரிந்த பொருள் பூனை—அதுதான் உபமானம்; இதற்கு முன் அவனுக்குத் தெரியாத பொருள் புலிக்குட்டி—அது உபமேயம். இன்னும் இந்நூல் பக்கம் 65 'உவமை' யின் கீழ் விரித்துக் கூறியிருத்தலைக் காண்க.

உபமான உபமேய வாக்கியங்களோடு கூடிய இந்நூற் செய்யுட்கள் சிலவற்றிற்கு எழுவாய் பயனிலை செயப்படு பொருள்களைக் கூறும்பொழுது உபமேய வாக்கியங்களுக்கு மாத்திரம் அவற்றைக் கூறல்வேண்டும்.

நீதிநூல்களிலும், இலக்கணநூல்களிலும், சிலவிடத்து ஓர் ஆணையாவது ஒரு பெண்ணையாவது முன்னிலைப்படுத்திக் கூறுதல் கவிமரபு; ஆடவரை முன்னிலைப்படுத்திக் கூறுவது ஆடூஉமுன்னிலை யெனவும் மகளிரைக்கூறின் மகடூஉ முன்னிலை யெனவும் படும். ஆனால், இந்நன்னெறிச் செய்யுட்களில் வருவனவெல்லாம் மகடூஉ முன்னிலைகளேயாம்.

இந்நன்னெறிவெண்பாநாற்பதிலுள்ள சொற்களுள் அரம்பை, ஈசன், கதலி, கலை, குணம், சடை, சிலை, சீதம்; பரம், பலி, மணி, முகம், முனி, மேரு என்ற தற்சம தற்பவ வடசொற்களே, ஏனைய செந்தமிழ்ச் சொற்களோடு எதுகை நயம் நோக்கி விரவிவந்துள்ளன.

ஒவ்வொருபாட்டையும் பதம்பிரித்து, அசைநீக்கி அனு வபித்து அருத்தந்தெரிந்து, பாட்டின்கருத்தைக் கவர்ந்த பிறகு மூலபாடத்திலுள்ள செய்யுளைச் சீர்சீராக இசைத்து மனப்பாடஞ் செய்வதே சிறப்புடையது.

பின்வரும் இலக்கணப்பாடத்திற்குரிய இணைச்சொற் கள்—I ல் ஒற்றுமைவேற்றுமைகளையும் II ல் வேற்றுமை களையும் மாணவர்கள் கவனித்தற்பாலது.

I அடுக்குத்தொடர்—இரட்டைக்கிளவி
ஆகுபெயர்—அன்மொழித்தொகை
ஏவல்வினை—வியங்கோள்வினை
குறிப்புவினைமுற்று—குறிப்புவினையெச்சம்
பெயர்ச்சொல்—வினைச்சொல்
பெயரெச்சம்—வினையெச்சம்
முதனிலை—முதனிலைத்தொழிற்பெயர்
வினைத்தொகை—பெயரெச்சத்தொடர்

II அல்வழிப்புணர்ச்சி—வேற்றுமைப்புணர்ச்சி
இரட்டல்—மிகல்
இன்னிசையளபெடை—சொல்லிசையளபெடை
குறிப்புவினை—தெரிநிலைவினை
குற்றியலுகரம்—முற்றியலுகரம்.
செய்வினை—செயப்பாட்டுவினை
தனிமொழி—தொடர்மொழி
தன்வினை—பிறவினை
தொழிற்பெயர்—தொழிலடியாகப்பிறந்தபெயர்
பகுபதம்—பகாப்பதம்
பால்காட்டும் விகுதிகள்—காலங்காட்டும் விகுதி
பெயரிடைநிலை—காலங்காட்டும் இடைநிலை [கள்
வினைமுற்று—வினையாலணையும்பெயர்
வினைமுற்று—வினையெச்சம்
வேற்றுமைத்தொகை—வேற்றுமைவிரி

பொருளடக்கம்

விஷயம்	பக்கங்கள்
நன்னெறி (மூலம்)... ...	1—7
மூலமும் உரையும்...	9—49
அந்வயம்	,,
அரும்பதவகராதி	59—61
அரும்பதவிளக்கம்	65—69
இலக்கத்தொகைமுறை ...	57—58
உபமானஉபமேயங்கள்	10—49
எழுவாய் பயனிலை முதலியவை ...	9—49
குறிப்புரை	,,
செய்யுட்களில் வரும் அசைகள் ...	15—49
பதப்பிரிவு	9—49
புராணகதைகள்	54—56
பொருள்கோள்வகைகள்... ...	51—53
யாப்பு உறுப்புக்கள்	71—74
ரகர றகர பேதங்கள்	62—63
லகர ளகர ,, ...	63—64

விஷயம்	பக்கம்
நன்னெறியில் வரும்	
அன்மொழித்தொகைகள்—	
பாம்பைக்குறிப்பது ...	66
பெண்ணைக்குறிப்பன ...	64
ஆசிரியர் வரலாறு	8
இடைச்சொல்—	
எகாரங்களுக்குப் பொருள் ...	50
ஓகாரங்களுக்குப் ,, ...	,,
உம்மைகளுக்குப் ,, ...	,,
உவமைச்சொற்கள்	,,
எதிர்மொழிகள்	64
ஒருசொற்பல்பொருள்	58
ணகர னகர பேதங்கள் ...	62
நேரிசை வெண்பாவின் இலக்கணம் ...	53
பொருளணிகள்	70

ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் இலக்கணம் 42
ஒருசொல் எதிர்மறைவினை (எச்சமாயும் முற்றாயும்) வருதற்கு ஒரு உதாரணம் ... 19
,, குறிப்புவினை (,, ,,) ,, ,, ... 14
ஒருமொழி பண்புத்தொகையாகவும் வேற்றுமைத்தொகையாகவும் ,, ,, ... 14
,, வினைத்தொகையாகவும் பெயரெச்சத்தொடராகவும் ,, ,, ... 23

பாட்டுமுதற்குறிப்பகராதி

செய்யுளின் முதற்குறிப்பு	எண்	செய்யுளின் முதற்குறிப்பு	எண்
அறிவுடையா ...	34	தங்கட்குதவிலர்கைத் ...	3
ஆக்குமறிவா ...	22	தங்குறைதீர்வுள்ளார் ...	10
இல்லானுக்கன்பிங் ...	15	தம்மையுந்தங்க ...	16
இன்சொலாலன்றி ...	18	தொலையாப்பெருஞ் ...	14
உடலின்சிறுமை ...	26	நல்லார்செயுங் ...	38
உடற்குவருமிடர் ...	29	நல்லோர்வரவா ...	19
உண்டுகுணமிங் ...	24	நீக்கமறுமிருவர் ...	5
உள்ளங்கவர்ந் ...	8	பகர்ச்சிமடவார் ...	23
எர்தைநல்கூர்ந் ...	17	பன்னும்பனுவற் ...	32
எழுத்தறியார் ...	21	பிறர்க்குதவிசெய்யாக் ...	4
எள்ளாதிருப்ப ...	33	பெரியவர்தந்நோய் ...	20
என்றுமுகம ...	1	பெரியோர்முற் ...	37
கடலேயனையம் ...	7	பெருக்கமொடு ...	13
கல்லாவறிவிற் ...	25	பேரறிஞர்தாக்கும் ...	31
கற்றவறிவினரைக் ...	35	பொய்ப்புலன்கள் ...	11
கற்றறியார் ...	39	பொன்னணியும் ...	40
காதன்மனையா ...	6	மாசற்றநெஞ் ...	2
கைம்மாறு ...	27	முனிவினுநல்குவர் ...	28
கொள்ளுங்கொடுங் ...	30	மெலியோர்வலிய ...	9
தக்கார்க்கேயிவர் ...	36	வருந்துமுயிரொன் ...	12

*பிழைதிருத்தம்

பக்கம்	அங்கம்	வரி	தப்பு	ஒப்பு
4	பாட்டு 23	1	பயில நோன்பாற்ற	பயிலநோன் பாற்ற
7	,, 40	1	பொன்னனியும்	பொன்னணியும்
9	பதப்பிரிவு	1	மின்வறி	மின்எறி
	,,	3	எ, அசை.)	ஏ, அசை.)
11	,,	5	[ஒண்(மை)	[ஒண்(மை)
12	குறிப்பு	1	ஒன்று—	ஒன்று—
	,,	5	(தங்கத்தினாற் செய்தகுன்று)	'தங்கத்தினாற் செய்த குன்று'
15	அர்த்தம்	1	பதினாறுகளை	பதினாறுகலை
16	பதப்பிரிவு	5	எ, அசை.)	ஏ, அசை.)
21	அர்த்தம்	9	ஒன்பது	ஒன்பது
23	அன்வயம்	12	செருக்கு(ஜச்)	செருக்கு(ஐச்)
28	அர்த்தம்	3	சழல்	சுழல்
30	,,	6	வெதசாத்திர	வேதசாத்திர
32	குறிப்பு	1	உயர்திணை	உயர்திணைப்
64	அன்மொழி	7	வளையளைந்த	வளையலணிந்த
65	இலக்கணை	1	பொமுத்து	யொழித்து
	உவமை	4	வுமைச்	வுவ்மைச்
66	கட்செவி	6	மட்பாணை	மட்பானை
		7	முதலியவை. (முகல்)	முதலியவை
69	மரூஉ மொழிகள்	4	தனிமொழி	தொடர்மொழி
70	அணிகள்	3	கோடாமற்	கொடாமற்

* இந்நூலைப் பயிலத்தொடங்குவதற்கு முன்னர் அச்சுப் பிழைகளைத் திருத்திக்கொள்ளுதல் நலம்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்
அருளிச் செய்த
நன்னெறி (மூலம்.)

காப்பு.

குறள்வெண்செந்துறை

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

நூல்.

நேரிசை வெண்பா.

1. என்று முகம னியம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்று
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ [சுவை
நாவிற் குதவு நயந்து.

2. மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொற் பிறிதென்க—ஈசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு.

3. தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவராற் றாங்கொள்க—தங்கநெடுங்
குன்றினாற் செய்தனைய *குண்டலத்தா யாவின்பால்
கன்றினாற் கொள்ப கறந்து.

---

*ஆசிரியர் வாக்கன்று.

4. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

5. நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம்.

6. காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்
கண்ணிரண்டு மொன்றையே காண். [குமால்

7. கடலே யனையம்யாங் கல்வியா லென்னு
மடலே றணையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும்.

8. உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

9. மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற்—பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறைப் புள்ளரசைப் பார்த்து.

10. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமே நின்று.

11. பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாந்—துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு.

12. வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத றானே புதுமை—திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு.

13. பெருக்க மொடுசுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர்—பெருக்கு*
விலையளவு நின்றவளை மாதே மதியின்
கலையளவு நின்ற கதிர்.

14. தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்த—லிலையா
லிரைக்கும்வண் டூதுமல ரீங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு.

15. இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யு—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு.

16. தம்மையுந் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மி
னிழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல்.

17. எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீஇ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

---

*ஆசிரியர் வாக்கன்று.

18. இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செ
யதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.

19. நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
யல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர.

20. பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

21. எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையா—மெழுத்தறிவா
ராயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை.

22. ஆக்கு மறிவா னலது பிறப்பினுன்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுந்
சவரார் கடலின் கடு.

23. பகர்ச்சி மடவார் பயில நோன்பாற்ற
றிகழ்ச்சி தருநெஞ்சத் திட்ப—நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுகப்* பேதாய் பலகா
லெறும்பூரக் கற்குழியு மே.

24. உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்
காக்கை விரும்புங் கனி. [றே

*ஆசிரியர் வாக்கன்று.

25. கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணாரே—வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள்.

26. உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு.

27. கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வ—ரம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று.

28. முனிவினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினு நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை.

29. உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோ
ரடுக்கு மொருகோடி யாக—நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
யண்ணிற் புலியைமதி மான்.

30. கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்மு
னுள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு.

31. பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது.

32. பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே—நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான்.

33. எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குறியர்
விள்ளா வறிஞரது வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல்.

34. அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு.

35. கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தா மென்று மதியாரே—வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம்.

36. தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோ—ரெக்காலு
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்.

37. பெரியோர்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழுந்—தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த *பொலிமுகத்தாய்* விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து.

38. நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகு
மல்லார் செயுங்கேண்மை யாகாதே—நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம்.

---

*ஆசிரியர் வாக்கன்று.

39. கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
யுற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே—பொற்றொடீஇ
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
வன்றே மணமுடைய தாம்.

40. பொன்னனியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றெவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்.

நன்னெறியைச் செய்த ஆசிரியர் வரலாறு.

(ஆசிரியர்) பெயர். இவரது இயற்பெயர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் அண்ணாமலை ரெட்டியாரால் ஆதரிக்கப்பெற்று, அவரது ஊரான துறைமங்கலத்தில் சிலகாலம் வசித்து வந்ததினால், 'துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்' எனக் காரணப்பெயர் பெற்றார் போலும்.

ஊர். இவர் பிறந்தது தொண்டைமண்டலத்திலுள்ள காஞ்சிபுரத்திலேயாம்.

சுற்றம். இவர், குமாரசாமி பண்டாரத்தின் மூத்த புத்திரர்; இவருடன்பிறந்தார்:—வேலையர், கருணைப்பிரகாசர், ஞானாம்பிகையராவர்.

சமயம், இவர்கள் எல்லாரும் வீரசைவர்.

தமிழாசிரியர். தர்மபுரவாதீனத்து வெள்ளியம்பலத் தம்பிரானவர்.

காலம். சதுரகராதி செய்த வீரமாமுனிவருடன் (Constantine Beschi) மத விஷயமாக வாதிட்டதை யொட்டி, இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

வேறு நூல்கள். பலவாயினும், அவ்வற்றுள் முக்கியமானவை:—நால்வர் நான்மணிமாலை, வெங்கைக்கோவை, பிரபுலிங்கலீலை, வேதாந்த சூடாமணி, சித்தாந்தசிகாமணி, தருக்க பரிபாஷை முதலியன.

நன்னெறி வெளிவந்த விதம். சிவப்பிரகாசர், ஒருநாள் பொழுது போக்காகக் கடற்கரைக்குச் சென்றபோது அங்கே நறுமணற்பரப்பில் 'நன்னெறி வெண்பா நாற்பதும்' எழுதி வர, அவற்றைக் கருணைப்பிரகாசர், மறுநாள் பார்த்தெழுதி வந்து வெளியிட்டார்.

நன்னெறி மூலமும் உரையும்.

காப்பு.

மின் ஏறி சடை முடி விநாயகன் அடி தொழ
நன்(மை) நெறி வெண்(மை) பா நாற்பதும் வரும் ஏ.
(வருமே—ஏ, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
மின்னெறி சடா முடி விநாயக னடி தொழ,	மின்னலைப் போல ஒளி வீசுகின்ற சடையே கிரீடமாகவுடைய விநாயகக்கடவுளின் திருவடிகளை வணங்கினால்,
நன்னெறி வெண் பா நாற்பதும் வரும்.	நன்னெறி யென்னும் நூலிலுள்ள நாற்பது வெண்பாவும் இடையூறின்றி எழுத முடியும்.

குறிப்பு.

நன்னெறி—(நன்மை + நெறி) நன்மையாகிய வழி என விரியும்: பண்புத்தொகை; இது, நன்மையைப் பயக்கும் வழிகளைக் குறிக்கும். (நன்னெறி அன்மொழித் தொகையாய் நூலுக்காயிற்று.)

காப்பு—'பு' விகுதி பெற்ற தொழிற்பெயர்; தொழிலாகு பெயராய்ச் செய்யுளுக்காயிற்று; புலவன் தான் செய்யும் நூல் இடையூறுபடாது இனிது முடியும் பொருட்டுக் காக்கும் வண்ணம் கடவுளைத் துதிக்கும் செய்யுள் என்பது திரண்ட பொருள். இது காப்புச் செய்யுள் எனப்படும்.

(நன்னெறி வெண்பா) நாற்பதும்—எழுவாய், வரும்—பயனிலை.

நூல்.

1. என்றும் முகமன் இயம்பாதவர்கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீது அற்றோர்—துன்று
பூவில் பொலி குழலாய்! பூ கை புகழவோ [சுவை
நாவிற்கு உதவும் நயந்து?

அந்வயம்.	அர்த்தம்.
பூவிற் பொலி குழலாய்! (கேள்.)	பூ முடித்து விளங்குகின்ற கூந்தலை யுடையவளே! (கேள்)
(1) பூங்கை (தன்னைப்) புகழவோ துன்று சுவை(களை) நாவிற்கு நயந்து உதவும்?	அழகிய கை, தனக்குக்கிடைத்த உருசியான உணவுகளைக் நாவிற்குக் கொடுப்பது ஏன்? (அந்நாக்கினால்) புகழப்படுவதற்கோ? (அன்று; கைம்மாறு கருதாம லெல்லாவுறுப்புகளுக்கு நன்மை புரிவது கையின் இயல்பு பற்றியாம்.)
(அது போல)	(அதுபோல)
(2) தீதற்றோர் (தமக்கு) என்றும் முகமனியம்பாதவர் கண்ணுஞ் சென்று பொருள் (களைக்) கொடுப்பர்.	குற்றமற்ற பெரியோர்கள் எந்நாளிலும் (தமக்கு) உபசார வார்த்தைகளைச் சொல்லாதவர்க ளிடத்தும் போய்த் (தமது) பொருள்களைக் கொடுப்பர். (ஜீவகாருண்யத்தினால்)

ஒவ்வொரு பாட்டிலும் கவனிக்க வேண்டியவை.

அந்வயத்தில்—(1) உவமானவாக்கியம். (2) உவமேயவாக்கியம். அதிலேயே கருத்துரையு மடங்கியுள்ளது. கோடிட்ட சொற்கள் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளாம்.

பதவுரை—அரும்பதவகராதியிற் காண்க.

2. மாசு அற்ற நெஞ்சு உடையார் வன்(மை) சொல்
இனிது ஏனையவர்
பேசு உற்ற இன்(இ + மை) சொல் பிறிது என்க ஈசற்கு
நல்லோன் எறி சிலையோ? நன்(மை) நுதால்!
[ஒண்(மை) கரும்பு
வில்லோன் மலரோ விருப்பு?

அந்வயம்.	அர்த்தம்.
நன்னுதால்!	அழகான நெற்றியையுடையவளே! (கேள்)
மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்(லும்) இனிது.	நல்ல எண்ணத்துடன் ஒருவர் சொல்லும் கடுஞ்சொல்லும் (பின்பு) நன்மையே (தரும்.)
ஏனையவர் பேசுற்ற இன்சொல்(லும்) பிறிது (நீ) என்க.	கெட்ட எண்ணத்துடன் ஒருவர் பேசும் இனிய மொழிகளும் கொடியதே (யென்று பின்வரும் புராண கதைகளால்) நீ அறியக்கடவாய்.
நல்லோன் எறி சிலையோ ஈசற்கு விருப்பு? (அல்லது) ஒண் கரும்பு வில்லோன் (எறி) மலரோ விருப்பு!	நல்லோன் என்ற சாக்கியநாயனர் பத்தியுடன் எறிந்த கல் சிவனுக்கு உவப்போ? (கெட்ட எண்ணத்துடன்) கரும்பு வில்லையேந்திய மன்மதன் எய்த பூவாளியோ. (அப்பெருமானுக்கு) உகந்தது? (நாயனர் எறிந்த கற்களே விருப்பென்றபடி.)

குறிப்பு.

ஏனையவர்—மாசற்ற நெஞ்சுடையாரை; முன் மாசற்ற நெஞ்சுடையார் என்றலின்.

பிறிது—இன்னாது (தீது) என்னும் பொருளது; முன் இனிது என்றதினல்.

3. தங்கட்கு உதவிலர் கை தாம் ஒன்று கொள்ளின் அவர்
தங்கட்கு உரியவரால் தாம் கொள்க தங்கம் நெடும்(ஐ)
குன்றினால் செய்து அனைய குண்டலத்தாய் ஆவின்
கன்றினால் கொள்ப கறந்து. [பால்

அந்வயம்.	அர்த்தம்.
நெடுந் தங்கத்தினாற் செய்த குன்றனைய குண்டலத்தாய்!	மாற்றுயர்ந்த பொன்னினாற் செய்த சிறுமலையை யொத்த காதணியையுடையவளே! (கேள்.)
(1) ஆவின்பாலைக் கன்றினாற் கறந்து கொள்ப.	(தானாகக் கொடாத) பசுவின்பாலைக் (அதன்) கன்றின் உதவியால், கறந்து கொள்வார்கள் (உலகத்தார்.)
(அதுபோல)	(அதுபோல)
(2) தங்கட்குதவிலர் கைத் தாம் ஒன்று(ஐக்) கொள்ளின் அவர் தங்கட்கு உரியவரால் தாம் கொள்க.	தங்களுக்குக் கொடாதவர் கையிலிருந்து ஒருபொருளைத் தாம் பெறவேண்டுமானால் அவர்களுக்கு (உதவிலர்க்கு) உரியவராலே அப்பொருளைப் பெறக்கடவர் (பாங்கறிவாளர்.)

குறிப்பு.

ஒன்று—ஒருபொருள்; எண்ணலளவையாகுபெயர்.

உரியவரால்—'ஆல்' மூன்றன் வேற்றுமையுருபு; ஏவுதற் கருத்தாப்பொருளது.

நெடுமை—தங்கத்திற்கு அடைமொழியாகக் கொள்ளவும்.

குன்றினால்—உருபு பிரித்து, (தங்கத்தினாற் செய்த குன்று) என்க.

கன்றினால்—'ஆல்' மூன்றன் வேற்றுமையுருபு; துணைக் காரணப்பொருளது.

4. பிறர்க்கு உதவி செய்யார் பெரும்(ஐ) செல்வம் வேறு பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறு ஆம் பிறர்க்கு உதவி செய்யா(த) கரும்(ஐ) கடல் நீர் சென்று புயல் முகந்து பெய்யா கொடுக்கும் பிறர்க்கு.

அந்வயம்.	அர்த்தம்.
(1) பிறர்க்குதவி செய்யாக் கருங்கடனீரைப் புயல் சென்று முகந்து பிறர்க்குப் பெய்யாக் கொடுக்கும்.	பிறர்க்கு (க்குடிக்க) உதவி செய்யாத கரிய கடலிலுள்ள நீரை மேகம் போய் மொண்டு பிறர்க்கு (மழையாக)ப் பெய்து கொடுக்கும்.
(அதுபோல)	(அதுபோல)
(2) பிறர்க்குதவி செய்யார் பெருஞ் செல்வம் வேறு பிறர்க்குதவி ஆக்குபவர் பேறாம்.	பிறர்க்கு உதவி செய்யாதவரது அதிக செல்வமானது பிறர்க்கு உதவி செய்பவராகிய மற்றொருவருடைய செல்வமாகும்.

குறிப்பு.

பிறர்க்கு—(*i*) (பிறர் + கு) நான்காம் வேற்றுமைப் பலர்பாற் பெயர் ; 'பிறவற்றிற்கு' என்பதன் பலவின்பால் ; 'பிறற்கு,' 'பிறட்கு,' 'பிறிதிற்கு' என முறையே ஆண், பெண், ஒன்றன்பால்களில் வரும்.

(*ii*) 'ஒருவர்க்கு' என்பது ஆண், பெண் என் இரு பாலர்க்கும் பொதுவாகிய ஒருமைப்பெயர் ; இது மரியாதைப்பன்மைப்பெய ரெனப்படும்.

வேறு—உண்டு, இல்லை என்பனவற்றைப்போல, இருதிணை, ஐம்பால், மூவிடங்கட்கும், பொதுவாகிவரும், வினைக் குறிப்புமுற்று.

5. நீக்கம் அறும் இருவர் நீங்கி புணர்ந்தாலும்
நோக்கின் அவர் பெருமை நொய்து ஆகும் பூ குழ
நெல்லின் உமி சிறிது நீங்கி பழமை போல் [லாய்!
புல்லினும் திண்மை நிலை போம்.

அந்வயம்.	அர்த்தம்.
பூக்குழலாய்!	பூ முடித்த கூந்தலுடையவளே! (கேள்.)
(1) உமி, நெல்லின் சிறிது நீங்கிப் பழமைபோற் புல்லினும், திண்மை நிலை போம்.	உமி, நெல்லிலிருந்து சிறிது நீங்கி முன்போலச் சேர்ந்தாலும், (நெல் முளைத்தற்குக் காரணமாக அது முன்னிருந்த) வலிமையான நிலை கெட்டுப் போம்.
(அதுபோல)	(அதுபோல)
(2) நீக்கமறு மிருவர் நீங்கிப் புணர்ந்தாலும், நோக்கினவர் பெருமை நொய்தாகும்.	பிரியாத இரண்டு நண்பர் சிறிது காலம் பகைத்துப் பிரிந்து (மறுபடியும்) கூடினாலும், அவர்களுடைய சிநேகத்தன்மை (முன்னிருந்ததைவிட எவ்வளவோ) குறைந்திருக்கும்.

குறிப்பு.

இருவர்—படர்க்கைப் பன்மைப்பெயர்; தன்மை முன்னிலைகளில் முறையே 'இருவேம்,' 'இருவீர்' என வரும்.

பூக்குழலாய்!—பூவென்பது மலருக்காயின், இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை; அழகுக்காயின் பண்புத்தொகையாம்; எவ்வாறாயினும் வல்லினம் மிகும்.

சிறிது—குறிப்புவினையெச்சம்; 'த்' எழுத்துப்பேறு, 'உ' விகுதி; குறிப்புவினைமுற்றில், 'து' விகுதியாம்.

6. காதல் மனையாளுங் காதலனும் மாறு இன்றி
தீது இல் ஒரு கருமம் செய்ப எ ஓது கலை
எண் இரண்டும் ஒன்று / ஒன்றும் மதி என் முகத்தாய் நோக்
கண் இரண்டும் ஒன்றையே காண். [கும் ஆல்

இப்பாட்டிலுள்ள அசைகள்.
- செய்பவே—எ, அசை.
- நோக்குமால்—ஆல், அசை.
- காண்—முன்னிலை அசை.

அந்வயம்.	அர்த்தம்.
ஓதி எண்ணிரண்டு (8 × 2) கலையுமொன்றுமதியென் முகத்தாய்!	புகழப்பட்ட பதினாறுகலைகளும் கூடிய சந்திரனே யென்று சொல்லும் படியான முகத்தையுடைய மாதே! (கேள்.)
(1) இரண்டு கண்ணு மொன்றையே நோக்கும்.	கண்கள் இரண்டானாலும் (தம்மில் மாறுபாடில்லாமலொத்து) ஒருபொருளையே பார்க்கும்.
(அதுபோல)	(அதுபோல)
(2) காதன் மனையாளும், காதலனும், மாறின்றித் தீதிலொரு கருமம் (அத்தைச்) செய்ப.	ஆசையுள்ள மனைவியும் கணவனும் (உடலிரண்டாயிருந்தும் உயிரொன்றுபோல) மாறிபாடில்லாமல் (மனமொத்துக்) குற்றமற்ற காரியங்களைச் செய்வார்கள்.

குறிப்பு.

நோக்குமால்—சிலபிரதிகளில் 'நோக்கருன்' எனக் காணப்படுகிறது; அப்பாடத்திற்கு, 'இரண்டு கண்ணும் ஒன்றையே நோக்கல்(ஐ) நீ காண்' என அனுவயித்துப் பொருள்கொள்ளவும். (தான்—அசை.)

7. கடலே அனையம் யாம் கல்வியால் என்னும்
அடல் ஏறு அனைய செருக்கு ஆழ்த்திவிடல் ஏ
முனிக்கு அரசு கையால் முகந்து முழங்கும்
பனி கடலும் உண்ணப்படும்.

(விடலே—ஏ, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
யாம், கல்வியாற் கடலையே யனைய மென்னு மடலே றனைய செருக்கு (இல் உன்னை நீ) ஆழ்த்திவிடல்.	நாம், கல்வியறிவினால், கடலைப் போல் விசாலித்திருக்கிறோ மென்று வலிமையுள்ள ஆண்சிங்கத்தின் செருக்கையொத்த கர்வத்தில், உன்னை நீயே ஆழ்த்திவிடாதே.
(ஏனென்றால்) முழங்கும் பனிக் கடலும் முனிக்கரசு கையால் முகந்து உண்ணப்படும்.	(ஏனென்றால்) ஒலிக்கின்ற குளிர்ச்சியான கடலையும் (முன்னொரு காலத்தில்) முனிவர்க்குத் தலைவரான அகஸ்தியர் தன் கையால் மொண்டு பருகியருளினார். (ஒரு சிறுவனால், ஒரு பெரிய வித்துவானும் அவமான மடையக்கூடுமென இக்கதையைக் காட்டினார் போலும்.)

குறிப்பு.

அனையம்—இடைச்சொல்லடியாகப் பிறந்த தன்மைப்பன்மைக் குறிப்புவினைமுற்று.

யாம்—'எம்' என்று விகாரப்பட்டு, விளிவேற்றுமை யொழிந்த மற்றைய வேற்றுமை யுருபுகளை யேற்கும்.

ஏறு—ஆண்விலங்கின் பெயர்; 'அடல்' என்ற அடைமொழியாற் சிங்கத்துக்கானது.

ஆழ்த்திவிடல்—எதிர்மறை ஏவலொருமை வினைமுற்று; 'ஆழ்த்திவிடு' பகுதி.

8. உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தட கரை தான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு?

(தடங்கரைதான்—தான், அசை)

அந்வயம்.	அர்த்தம்.
(1) வெள்ளந் தடுத்தலரிதோ? (அல்லது) தடங்கரை (யைப்)பேர்த்துவிடுத்தலரிதோ? (வெள்ளந் தடுத்தலரிதென்று) விளம்பு.	(ஆறு முதலிய நீர்நிலைகளில்) வெள்ளம் (பெருகி வரும்போது கரை புரண்டு போகாதபடி அதைத்) தடுப்பது அருமையோ? (அல்லது) அகன்று விசாலித்திருக்கிற கரையை வெட்டியுடைத்து வெள்ளத்தை வெளியே செல்லவிடுதல் அருமையோ? (வெள்ளத்தைத் தடுப்பதே சாமர்த்தியமென்று) சொல்லுவாய்.
(அதுபோல)	(அதுபோல)
(2) உள்ளங் கவர்ந்தெழுந்தோங்கு சினங் காத்துக்கொள்ளுங் குணமே குணம்; (நீ) என்க.	மனதைத் தன் வசமாக்கி மேன்மேலதிகரிக்கும் கோபத்தை அடக்கிக் கொள்ளும் குணத்தையே (நல்ல) குணம் (என்னலாமாகையால் இதை நீ) அறியக்கடவாய்.

குறிப்பு.

பேர்த்து—'பெயர்த்து' என்பதின் மரூஉ*; இவ்வாறே நிகளம்—நீளம், பொழுது—போது, தொகுப்பு—தோப்பு முதலியன மருவி வருதல் காண்க.

விடுத்தல்—பிறவினைத்தொழிற்பெயர்; தன்வினையில் விடுதல் என வரும். இதுபோலவே, அழிதல்—அழித்தல், கெடுதல்—கெடுத்தல், முதலியவை வரும்.

*அரும்பத விளக்கம் காண்க.

9. மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் த(ம்)மை தாம் மருவில் பலி ஏல்
கடவுள் அவிர் சடை மேல் கண் செவி அஞ்சாது ஏ
படர் சிறை அ புள் அரசை பார்த்து.
(அஞ்சாதே—ஏ, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
மெலியோர் (தமது வலியவிரவலரினும்) வலியோர் தம்மை மருவில் (அவ்) வலிய விரவலரைத் தாம் அஞ்சார்.	வலியில்லாதவர் (தமது வலிய பகைவரைக்காட்டிலும்) வலிமையுடையோரைச் சேர்ந்தால், வலியுடைய அப் பகைவர்க்குத் தாம் பயப்படார்.
(திருட்டாந்தம்) பலியேல் கடவுளவிர்சடைமே(லிருக்கும்) கட்செவி, படர் சிறையப் புள்ளரசைப் பார்த்து அஞ்சாது.	(இதற்குத் திருட்டாந்தம்) (அன்பருடைய) பூசையை யேற்கும் சிவபிரானுடைய பிரகாசமான சடைமேலிருக்கும் பாம்பு, விரிந்த சிறகையுடைய அக்கருடனைக் கண்டு பயப்படாது.

குறிப்பு.

சடை—ஆவி று, ஐயானது ; கதை, சபை முதலியவற்றைப் போல. சிவனுடைய சடைக்குக் 'கபர்த்தம்' என்று பெயர்.

சிறையப்புள்ளரசு—சிறகுகளையுடைய அந்தக்கருடன்; இரண்டாம்வேற்றுமையுருபும் பயனும் உடன் தொக்க தொகை. அ—உலகறிசுட்டு ; கருடனைக்குறிக்கும். 'சிறைய' என்பதைக் குறிப்புப்பெயரெச்சமாகக் கொள்ளின், அதன்முன் வலிமிகாமல், "படர்சிறைய—புள்ளரசைப்—பார்த்து." எனப்பாடபேதமாகும்.

10. தம் குறை தீர்வு உள்ளார் தளர்ந்து பிறர்க்கு உறாஉம்
வெம்(மை) குறை தீர்க்கிற்பார் விழுமியோர் திங்கள்
கறை இருளை நீக்க கருதாது உலகில்
நிறை இருளை நீக்கும் மேல் நின்று.

அன்வயம்.	அர்த்தம்.
(1) திங்கள் (தனது) கறையிருளை நீக்கக் கருதாது உலகின் நிறையிருளை மேனின்று நீக்கும்.	சந்திரன், தனது களங்கமாகிய (சிறு) இருளைநீக்க நினைக்காமல் உலகத்தில் நிறைந்த (பெரிய) இருளை ஆகாயத்திலிருந்தே நீக்கும்.
(அதும்பால)	(அதுபோல)
(2) விழுமியோர், தங்குறை தீர்வுள்ளாராய்ப் பிறர்க்குறும் வெங்குறை (களைத்) தளர்ந்து தீர்க்கிற்பார்.	பெரியோர், தமக்கு நேரிடும் (அற்ப) குறைகளை நீக்கிக்கொள்ள மனமில்லாதவராய்ப் பிறர்க்கு நேர்ந்த கொடிய (பல) குறைகளைப் பரிந்து தீர்க்க வல்லவராவர்.

குறிப்பு.

உறாஉம்—எதிர்காலப்பெயரெச்சம்; 'உறு' என்னும் உரிச்சொல்லடியாகப்பிறந்து, வினைத்தன்மையடைந்து, இசை நிறைக்க அளபெடுத்தது; இது *இன்னிசையளபெடை. (*அரும்பத விளக்கம் காண்க.)

நீக்க—நிகழ்காலவினையெச்சம். 'அ' வினையெச்சவிகுதி, காரணப்பொருளில் இறந்தகாலத்தையும், காரியப்பொருட்டில் எதிர்காலத்தையும், காரணகாரியமில்லாதபோது நிகழ்காலத்தையும் குறிக்கும்.

(உ-ம்) உண்ணப்பசி ஆறிற்று : இறந்தகாலம், படிக்க வந்தான் : எதிர்காலம், சூரியன் அஸ்தமிக்க வந்தான் : நிகழ்காலம்.

கருதாது—(கருது + ஆ + த் + உ) எதிர்மறை வினையெச்சம்.
(கருது + ஆ + து) எதிர்மறை வினைமுற்று.

11. பொய் புலன்கள் ஐந்தும் நோய் புல்லியர் பால் அன்றி
மெய் புலவர் தம்பால் விளையா ஆம் துப்பின் [ஏ
சுழற்றும் கொல் கல் தூணை சூறுவளி போய்
சுழற்றும் சிறு(மை) புன்(மை) துரும்பு.

(அன்றியே—ஏ, அசை. | விளையாவாம்—ஆம், அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
(1) சூறுவளி போய்ச் சிறுபுன் றுரும்பைத் (தன்) துப்பிற் சுழற்றும்; கற்றூணைச் சுழற் றுங்கொல்?	சுழல் காற்றானது (அதிக) வலிவுடன் சென்று, இலேசாகவிருக்கும் சிறிய துரும்பை யெடுத்துச் சுழற்றி யடிக்குமே யொழிய, கல்லுக்கம்பத்தைச் சுழற்றுமோ? (சுழற்றமாட்டாது என்றபடி.)
(அதுபோல)	(அதுபோல)
(2) பொய்ப்புலன் களைந்தும், புல்லியர்பால் (நோய்விளைக்குமே) அன்றி மெய்ப்புலவர் சம் பால் நோய்(ஐ) விளையா.	பொய்யாகிய ஐம்புலன்கள் (மெய்யறிவில்லாத) மூடர்களை (த்தம்வசப் படுத்தி அவர்களுக்குத் துன்பமுண்டாக்குமே) யன்றி மெய்ஞ்ஞானிகளிடத்திற்சென்று கெடுதி செய்யா.

குறிப்பு.

புல்லியர்—'மை' விகுதி கெட நின்ற 'புல்' என்னும் பண்படியாகப் பிறந்த பெயர்.

சுழற்றும்—'உம்' விகுதிபெற்ற தெரிநிலைவினைமுற்று; இவ்விகுதி முப்பாலிலும் பலவின்பாலிலும் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உரியதாம்.

(உ-ம்.) அவன், அவள், அது, அவை—உண்ணும்.

கொல்—ஐயப்பொருள் தரும் இடைச்சொல்; இங்கே வினப்பொருளில் வந்தது.

12. வருந்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில்
பொருந்துதல் தான் ஏ புதுமை திருந்து இழாய்!
சீதம் நீர் பொள்ளல் சிறு(மை) குடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு.
(பொருந்துதருனே—தான், அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
திருந்திழாய்!	ஒழுங்கான ஆபரணங்களைப் பூண்ட மாதே! (கேள்.)
(1) சீதநீர் பொள் ளற் சிறுகுடத்து நில்லாது வீதலோ (வியப்பு? அன்று;) நிற்றல் வியப்பு.	குளிர்ச்சியான நீரானது, சில்லியை யுடைய சிறிய குடத்தில் தங்கி நிற்கா மல், ஒழுகிப்போவதோ ஆச்சரியம்? (அன்று;) நிற்றலே ஆச்சரியமாகும்.
(அதுபோல)	(அதுபோல)
(2) வருந்து முயி ரொன்பான் வாயிலு டம்பிற் பொருந்து-தலே புதுமை.	(பிறப்பு இறப்பால்) வருத்தப்படு கின்ற உயிரானது ஒன்பது துவாரங்க ளுடைய உடம்பிற் றங்கியிருப்பதே ஆச்சரியமாகும்.

குறிப்பு.

ஒன்பான்—(ஒன்பது + ஆன்) ஒன்பதில், பகரவொற்றே றிய உயிரும், ஈற்றுயிர்மெய்யுங்கெட்டு 'ஆன்' சாரியை யேற்றது.

வாயில்—'இல்வாய்' என்பது 'வாயில்' எனச் சொன்னிலை மாறிவந்தது; இது *இலக்கணப்போலி யெனப்படும். வாசல்—வாயில் என்பதன் மரூஉ.

புதுமை—அற்புதம்; பண்பாகுபெயராய் ஆச்சரியமான காரியத்துக்காயிற்று.

பொள்ளல்—குடத்திலுள்ள சில்லிகள்; இது பொத்தல் எனவும் வழங்கும்.

நீர்—ஜலம்; நீர்மையென்னும் பண்படியின் விகாரம்.

*அரும்பத விளக்கம் காண்க.

13. பெருக்கமொடு சுருக்கம் பெற்ற பொருட்கு ஏற்ப
விருப்பமொடு கொடுப்பர் மேலோர் பெருக்கு
விலை அளவு நின்ற வளை மாதே! மதியின்
கலை அளவு நின்ற கதிர்.

அன்வயம்.	அர்த்தம்.
விலை பெருக்களவு நின்ற வளை மாதே! (1) மதியின் கதிர், கலையளவு நின்ற.	அதிக விலையேறப்பெற்ற கங்கண மணிந்தவளே! (கேள்.) சந்திரகிரணங்கள் (வளர்தலையும் தேய்தலையும் பொருந்திய) கலைகளின் அளவாக நின்றன.
(அதுபோல) (2) மேலோர், பெருக்கமொடு சுருக்கம் பெற்ற (பொருளைத் தத்தம்) பொருட்கேற்ப விருப்பமொடு கொடுப்பர்.	(அதுபோல) பெரியோர்கள், வளர்தலையும் குறைதலையுமுடைய பொருளைத் தமது செல்வத்தின் (உயர்வு தாழ்வுக்குத்) தகுந்த தன்மையாக (வறியோர்க்கு) விருப்பத்தோடு கொடுப்பர்.

குறிப்பு.

விருப்பமொடு—'ஒடு' அடைமொழிப்பொருளது.

சுருக்கம்—(சுருங்கு பகுதி) மென்றொடர்க்குற்றியலுகர வீற்று வினைப்பகுதி, 'அம்' விகுதி பெற்றுத்தொழிற் பெயராகும்போது பகுதி மெல்லொற்று வல்லொற்றாக மாறும்; அச்சம், திருத்தம், தோற்றம், நடுக்கம், விருப்பம் முதலியன வேறு உதாரணங்களாம்.

நின்றவளை—'நின்ற' இறந்தகாலப்பெயரெச்சம்.

கதிர்நின்ற—'நின்ற' இறந்தகாலவினைமுற்று; 'அ' பலவின்பால் விகுதி; 'அன்' சாரியை பெற்று 'நின்றன' என வரும். கதிர் பொருளாற் பன்மையாதலின் பன்மைவினையைக் கொண்டு முடிந்தது.

14. தொலையா(த) பெரும்(ஐ) செல்வம் தோற்றத்தோம்
தலையாயவர் செருக்கு சார்தல் இ(ல்)லை ஆல் [என்று
இரைக்கும் வண்டு ஊது/ஊதும் மலர் ஈர்ம்(ஐ) கோதாய்!
வரைக்கும் வந்தன்று வளைவு. [மேரு
(இலையால்—ஆல், அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
இரைக்கும் வண்டூது மலர் (ஆல் தொடுத்த) ஈர்ங்கோதாய்!	ஒலிக்கின்ற வண்டுகள் ஊதுகின்ற பூக்களாலாகிய குளிர்ச்சியான மாலையையணிந்தவளே! (கேள்.)
மேருவரைக்கும் வளைவு வந்தன்று.	(எக்காலத்திலும் அசைவற்றிருந்த) மகாமேருமலைக்கும் (ஒருகாலத்தில்) வளைவு வந்தது.
(இதைக்கருதித்) தலையாயவர், தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோமென்று செருக்கு (ஐச்) சார்தலில்லை.	(இதைக்கருதித) தலைமையாகிய அறிவுடையோர் (எக்காலத்திலு) மழியாத அளவற்ற செல்வத்திலே பிறந்திருக்கிறேமென்று கர்வத்தை அடைதல் இல்லையாம்.

குறிப்பு.

தொலையா—ஈறு கெட்ட பெயரெச்சம்; ஈறுகெடாமலிருந்தால், 'த்' *எழுத்துப்பேற்றையும் 'அ' விகுதியையும் பெற்று, 'தொலையாத' என நின்று அதன் முன் வலி யியல்பாகும். (*அரும்பத விளக்கம் காண்க.)

ஊதுமலர்—(1) ஊது + மலர்—வினைத்தொகை.
(2) ஊதும் + மலர்—பெயரெச்சம்.

வந்தன்று—வந்தது என்று பொருள்; எதிர்மறையில் 'வந்தின்று' எனவரும்.

15. இல்லானுக்கு அன்பு இங்கு இடம் பொருள் ஏவல் [மற்று
எல்லாம் இருந்தும் அவற்கு என் செய்யும்? நல்லாய்!
மொழியிலார்க்கு ஏது முது(மை) நூல் தெரியும்?
விழியிலார்க்கு ஏது விளக்கு?

(ஏவன்மற்றெல்லாம்—மற்று, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
நல்லாய்!	நற்குணமுடையவளே! (கேள்.)
(1) i. மொழியிலார்க்கு முதுநூலேது?	பேச்சில்லாத ஊமைகளுக்குப் பழமையான நூலென்ன பயனைச் செய்யும்?
ii. தெரியும் விழியிலார்க்கு விளக்கேது?	பார்க்கக் கண்ணில்லாத குருடர்கட்குத் தீபம் என்ன பயனைச் செய்யும்?
(ஆகையால்)	(ஒருபயனுஞ் செய்யாதாகையால்)
(2) இங்கன்பில்லானுக்கு, இடம் பொருள் ஏவல் எல்லாமிருந்தும், (அவை) அவற்கு என் செய்யும்?	இவ்வுலகத்தில் அன்பில்லாதவனுக்கு இடம், பொருள், ஏவலாளர் இவையெல்லாமிருந்தும் (ஈகைத்தன்மையற்ற) அவனுக்கு என்ன பயனைத் தரும்? (ஒருபயனும் உண்டாகாதென்றபடி.)

குறிப்பு.

அன்பு—அழகு, சுவை, வனப்பு, முதலியவற்றைப் போல விகுதி பெறாத பண்புப்பெயர்.

இங்கு—இடப்பெயர்; இதன் முன் வலி மிகும்.

என்—எவன் என்னும் வினைப்பெயரின் மரூஉ; செய்யும் என்னும் வினைமுற்றிற்குச் செயப்படுபொருளாம்.

ஏது—இரண்டும், வினாவடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினைமுற்றுக்கள். (ஏ—பகுதி, து—விகுதி.)

16. தம்மையும் தங்கள் தலைமையும் பார்த்து உயர்ந்தோர்
தம்மை மதியார் த(ம்)மை அடைந்தோர் தம்மின்
இழியினும் செல்வர் இடர் தீர்ப்பர் அல்கு
கழியினும் செல்லாதோ கடல்?

அந்வயம்.	அர்த்தம்.
(1) கடல் அல்கு கழியினுஞ் செல்லாதோ?	(பெரிய) கடலானது (சிலசமயங்களிற் சிறிய) உப்பங்கழியினும் போய்ப் பாயாதோ? (பாயும்; அக்கழியிலுள்ள அசுத்தங்களையும் போக்கும்.)
(அதுபோல)	(அதுபோல)
(2) தம்மையுந் தங்கடலைமையும் பார்த்துத் தம்மை மதியார் (ஆகிய) உயர்ந்தோர், தம்மை யடைந்தோர் தம்மின் இழியினும், செல்வர்; இடர் (ஐத்) தீர்ப்பர்.	தங்கள் பெருமையையும், தங்களுக்கிருக்கும் அதிகாரத்தையும் பார்த்துப் பொருட்படுத்ாத (அறிவொழுக்கங்களிற் சிறந்த) பெரியோர்கள், தங்களையடைந்தோர் தம்மைப் (பெரியோரை) பார்க்கிலும் தாழ்ந்தவராயினும் (அவர்களிருப்பிடஞ்) சென்று அவர்கள் துன்பங்களைப் போக்குவா[illegible]

குறிப்பு.

தம்மின்—ஐந்தாம் வேற்றுமையுருபு, எல்லைப்பொருளது.
இழி—இழிஞருக்கானது பண்பாகுபெயர்.
இடர்—துன்பம்; இதற்கிணங்க உவமானத்தில் 'அசுத்தம்,' என்னுஞ்சொல் வருவிக்கப்பட்டது.
அல்குகழி—உப்புக்கழி அல்லது சிற்றாறு; இத்தொடர்மொழியை வேற்றுமைத்தொகையாகவும் வினைத்தொகையாகவுங்கொள்ளலாம்; அல்கு என்பது முதனிலைத்தொழிற்பெயராதலின்.
கடல்—கட்டல் (தோண்டுதல்) என்பதின் விகாரம்.

4

17. எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்து என்று அவன்
மைந்தர் தம் ஈகை மறுப்பரோ? பசுமை தொடீ!
நின்று பயன் உதவி நில்லா அரம்பையின் கீழ்
கன்றும் உதவும் கனி.

அன்வயம்.	அர்த்தம்.
பைந்தொடீ! (1) நின்று பயனுதவி (அதனாற் பிறகு) நில்லா அரம்பையின் கீழ்க்கன்றும் கனி உதவும். (அதுபோல) (2) எந்தை இரப்பார்க்கீந்து நல்கூர்ந்தான் (ஆனான்) என்று (அவன்) மைந்தர், தம்மீகை(யை) மறுப்பரோ?	பசும்பொன் வளையலணிந்தவளே! (சிலகாலம் அழிவில்லாமல் வாழ்ந்து (குலைதள்ளிப்பழமாகிய) பயனைக்கொடுத்து (ப்பிறகு அழிந்த) வாழையின் கீழ்க்கன்றும் (தன் தாயைப்போலவே) பழந்தரும். (இது இயற்கை.) (அதுபோல) 'எங்களப்பன் ஏழைகளுக்குக் கொடுத்து ஏழையானனே' என்று (ஆலோசிக்காமலே உயர் குலத்திற் பிறந்த) அவன் பிள்ளைகளும் தானதருமம் செய்வதில் பின்வாங்குவரோ? (பின்வாங்கமாட்டாரென்றபடி.)

குறிப்பு.

எந்தை—'யாம்' பகுதி 'எம்' என விகாரப்பட்டுத் 'ஐ' முறைப்பெயர்விகுதி பெற்றது; எம் தந்தை என்பதன் மரூஉமொழியாகக் கொள்வாருமுளர்; இது அறஞ்செய்யு மகன் கூற்று.

பைந்தொடி—பசும்பொன்னாற்செய்த கையணி யணிந்த பெண்ணைப் பைந்தொடி எனல், ஒருவகைக்குறிப்பு; செஞ்செவியர் என்பது வேறு உதாரணம்.

ஈகை—'கை' கைவிகுதிபெற்ற தொழிற்பெயர்; 'ஈ', இழிந்தோனிரப்புரை.

18. இன்(இ + மை) சொ(ல்)லால் அன்றி இரு(மை) நீர்
[வியல் உலகம்
வன்(மை) சொ(ல்)லால் என்றும் மகிழாது ஏ பொன்
அதிர் வளையாய்! பொங்காது அழல் கதிரால் [செய்
கதிர் வரவால் பொங்கும் கடல். [தண்(மை) என்
(மகிழாதே—ஏ, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
பொன்செய் அதிர் வளையாய்!	ஒலிக்கின்ற பொன் வளையல்களை யணிந்த மாதே! (கேள்.)
(1) கடல், தண்ணென் கதிர் வரவாற் பொங்கும்; அழற்கதிராற் பொங்காது.	கடலானது குளிர்ச்சி பொருந்திய கிரணங்களுடைய சந்திரோதயத்தினாற்பொங்கும்; அனல்போன்றகதிரை வீசும் சூரியனது வருகையாற் பொங்காது.
(அதுபோல)	(அதுபோல)
(2) இருநீர் வியனுலகம், இன் சொலாலன்றி வன் சொலா லென்றும் மகிழாது.	பெரிய கடலாற் சூழப்பட்ட பரந்த உலகத்திலுள்ளவர் இனிய மொழிகளாற் சந்தோஷப்படுவார்களேயன்றிக் கடுஞ்சொற்களால் எந்நாளும் மகிழ்ச்சியடையமாட்டார்கள்.

குறிப்பு.

இன்சொல்—உள்ளன்பினால் உரைக்கும் மொழிகள்; மென் சொல் என்பது பணிவுடன் கூறும் மொழிகளை.

அன்றி—எதிர்மறைக்குறிப்புவினையெச்சம்; இதில், 'றி' விகுதி எதிர்மறைக்குறிப்பிற்கே வருவதன்றிச் செய்யுளில் 'று' ஆகத்திரிந்து அதன் முன் வலி இயல் பாகும். இன்றி என்பதற்கும் இதுவே இலக்கணம்.

பொங்காதழல்—பொங்காது + அழல்; வருமொழி தழல் எனின், 'பொங்காது தழல்' என்று பாடமாகும்; அது தனைக்குப்பொருந்தாது.

19. நல்லோர் வரவால் நகை முகம் கொண்டு இன்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவார் வல்லோர்
திருந்தும் தளிர் காட்டி தென்றல் வர தேம் / தேன் மா
வருந்தும் சுழல் கால் வர.

அந்வயம்.	அர்த்தம்.
(1) தேமா, தென்றல் வரத்தளிர்காட்டித்திருந்தும்; சுழல் கால் வர வருந்தும். (அதுபோல)	மாமரமானது, தென்றற்காற்று வீச இலைதுளிர்த்துச் சிறப்புற்றிருக்கும்; சுழல் காற்றடித்தால் வருந்தும். (கிளை முதலியவை சேதப்படுவதால்.) (அதுபோல)
(2) வல்லோர், நல்லோர் வரவா னகை முகங் கொண்டின்புறீஇ அல்லோர் வரவான் அழுங்குவார்.	(கல்வியறிவில்) வல்லவர், நல்லவர் வரவால் முகமலர்ச்சியுடன் இன்பமடைந்து, தீயவருடைய வருகையால் (துன்பமடைந்து) வருத்தப்படுவார்.

குறிப்பு.

இன்புறீஇ—'இன்புற்று' என்பதின் விகாரம்; *சொல்லிசை யளபெடையாம். (*அரும்பத விளக்கம் காண்க.)

அல்லோர்—முன்நல்லோர்என்பதினுல், தீயோருக்காயிற்று.

தென்றல்—தெற்கு + து + அல்; 'து' சாரியை, 'அல்' பெயர்விகுதி; 'தென்' தெற்கு, என்பதின் விகாரம்

தென்றல்—தெற்கிலிருந்து வருங் காற்று.
வாடை—வடக்கி " " "
கொண்டல்—கிழக்கி " "
கோடை—மேற்கி " " "

வரவால்—வரவு என்னும் தொழிற்பெயர் மூன்றன் உருபேற்று நின்றது. வரவான் என்பதும் அப்படியே. இவ்வேற்றுமையுருபுகள் ஏதுப்பொருளன.

20. பெரியவர் தம் நோய் போல் பிறர் நோய் கண்டு
எரியின் இழுது ஆவர் என்க தெரி இழாய்! [உள்ளம்
மண்டு பிணியால் வருந்து பிற உறுப்பை
கண்டு கலுழும் ஏ கண்.

(கலுழுமே—ஏ, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
தெரியிழாய்!	தெரிந்தெடுத்த இரத்தினாபரணங்களை யணிந்த பெண்ணே! (கேள்.)
(1) கண், மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக் கண்டு கலுழும்.	கண்கள், நோயுற்று வருத்தப்படுகிற மற்ற அவயவத்தைக் கண்டு வருந்தும்.
(அதுபோல)	(அதுபோல)
(2) பெரியவர், பிறர் நோய்(ஐக்) கண்டு தந்நோய் போல் உள்ள மெரியினிழுது ஆவர்; (இதை நீ) என்க.	(அறிவொழுக்கங்களிற்) பெரியவர், பிறர்க்கு (வந்த) வியாதியைப் பார்த்துத்தமக்கு (வந்த) வியாதியைப்போல (நினைத்துத்) தீயிற் (பெய்த) நெய் போல, மனமுருகுவார். (இவ்விஷயத்தை நீ) அறியக்கடவாய்.

குறிப்பு.

நோய்—என்றது துன்பத்தை; இது காரணவாகுபெயர்.

எரியினிழுது—ஏழாம் வேற்றுமையுருபும் பயனும் உடன் தொக்க தொகை; இன், சாரியை. எரியினிழுதாவர் என்றது, மிகவருந்துவாரென்றபடி.

என்க—வியங்கோள்வினைமுற்று; இதற்கு உவமேய வாக்கியம் செயப்படுபொருளாய் நின்றது.

கண்—*சாதியொருமை.

---

*அரும்பத விளக்கம் காண்க.

21\. எழுத்து அறியார் கல்வி பெருக்கம் அனைத்தும்
எழுத்து அறிவார் காணின் இல்லையாம் எழுத்து
ஆயும் கடவுள் அவிர் சடை முன் கண்ட [அறிவார்
வீயும் சுர நீர் மிகை. [அளவில்

(இலையாம்— ஆம், அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
எழுத்தறியார் கல்விப்பெருக்கம் அனைத்தும் எழுத்தறிவார் (ஐக்) காணின் இலை. (இதற்கொருகதை) எழுத்தறிவாராயுங் கடவுளவிர் சடையைத் (தன்) முன் கண்டளவில் சுரநீர் மிகை வீயும்.	இலக்கணந் தெரியாதவர்களுடைய கல்வித்திற மெல்லாம் இலக்கணந் தெரிந்தவரைக் கண்டால் இல்லாமற் போகும் (இதற்கொரு கதை) வேதசாத்திர முணர்ந்த பெரியோர் அறிய விரும்பும் சிவனுடைய விரி சடையைத் தன்முன் கண்டவுடனே ஆகாசகங்கையானது (அச்சடையிற் புகுந்து) பெருக்கற்றுப் போயிற்று.

குறிப்பு.

அறியார்—எதிர்மறைவினையாலணையும்பெயர்; ஆகாரவிடைநிலை புணர்ந்து கெட்டது; வருமெழுத்து உயிராதலின். 'அறியாதார்' என்பதில் 'த்' எழுத்துப்பேறு மெய்யாதலால், ஆகாரம் கெடாமல் நின்றது.

அறிவார்—'வ்' எதிர்காலவிடைநிலை, காலத்தைக் காட்டாமல், தன்மையையுணர்த்தும்.

காணின்—'இன்' எதிர்காலங்காட்டும் வினையெச்ச விகுதிகளிலொன்று; இது காரணப்பொருளைத் தந்து, எதிர்காலச்சொல்லையே முடிக்குஞ்சொல்லாகக்கொள்ளும்.

சுரநீர்—'வானயாறு' என்பது தமிழ்மொழி; நீர் இலக்கணையாய் ஆற்றைக்குறிக்கும்.

22\. ஆக்கும் அறிவான் அ(ல்)லது பிறப்பினல்
மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க நீக்கு
பவர் ஆர்? அரவின் பரு(மை) மணி கண்டு என்றும்
கவரார் கடலின் கடு.

அந்வயம்.	அர்த்தம்.
அரவின் பரு மணி(யைக்) கண்டு நீக்குபவர் யார்? (ஒருவருமில்லை.) (யாவரும்) கடலின் கடு(வை) என்றும் கவரார்.	(நஞ்சையுடைய) பாம்பினிடத்துண்டாகிய மாணிக்கத்தைக் கண்டு (அதை விரும்பாமல்) வெறுப்பவர் யார்? (ஒருவருமில்லை யென்றபடி.) (எவரும் பாற்) கடலிலுண்டான விஷத்தைக் கொள்ள எப்பொழுதாகிலும் விரும்பார்.
(ஆகையால்)	(ஆகையால்)
மீக்கொள் ஆக்கும் அறிவானல்லது பிறப்பினல் உயர்விழிவு (களை நீ) வேண்டற்க.	மேலாகக் கொள்ளுகின்ற உயர்ந்த பதவியைத் தரும் (கல்வி) அறிவினலல்லாமல் ஒவ்வொருவருடைய பிறப்பினல், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று நீ (நினைக்க) வேண்டாம்.

குறிப்பு.

அறிவு—நுண்ணறிவோடு நூலறிவுமாம்.

அரவு—அரா என்பது, 'அர' எனக்குறுகி, உகரச்சாரியையேற்றது; 'அம்' சாரியை பெற்று 'அரவம்' எனவும் வரும். குரவு, சுறவு, முழவு, முதலியன வேறு உதாரணங்களாம்.

ஆர்—யார் என்பதின் மரூஉமொழி; இவ்வாறே யாடு, யாமை, யாளி முதலியவை மருவி வருதல் காண்க.

கடு—கசப்பு; பண்பாகுபெயராய் விஷத்துக்காயிற்று.

23. பகர்ச்சி மடவார் பயில நோன்பு ஆற்றல்
திகழ்ச்சி தரும் நெஞ்சம் திட்பம் நெகிழ்ச்சி
பெறும் பூரிக்கின்ற முகம் பேதாய்! பல கால்
எறும்பு ஊர கல் குழியும் ஏ.

(குழியுமே—ஏ, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
பூரிக்கின்ற முகப் பேதாய்!	பேதமைக்குணம்பூண்டு முகப்பொலிவடைகின்றவளே! (கேள்.)
(1) பலகால் எறும்பு ஊரக் கற் குழியும்.	பலதடவை (சிற்) றெறும்புகள் ஊர்ந்து (செல்லக் கருங்) கல்லும் குழிந்து விடும்.
(அதுபோல)	(அதுபோல)
நோன்பாற்றறிகழ்ச்சி தரு நெஞ்சத் திட்பம், மடவார் பகர்ச்சி பயில நெகிழ்ச்சி (யைப்) பெறும்.	தவத்தைச் செய்தலால், விளங்குகின்ற (ஒரு தவசியின்) மனவுறுதியானது, பெண்களுடைய வாய்ச்சொல்லோடு பழகிவர (நாளுக்குநாள்) தளர்தலை அடையும்.

குறிப்பு.

மடவார்—'மடமை' பண்படியாகப்பிறந்த உயர்திணை பெண்பாற்பன்மைப்பெயர்; மடவியர் என்பதுமிது; மடவாள் என்பதவற்றின் ஒருமை.

நெஞ்சம்—'அம்' சாரியை; மனதுக்கு இடவாகுபெயர்.

திட்பம்—'பம்' விகுதி பெற்ற பண்புப்பெயர்; இவ்விகுதி பெற்றுத் தட்பம், நுட்பம், ஒட்பம், வெப்பம், பருப்பம், அருப்பம் முதலியவை வருதல் காண்க.

பலகால்—பலமுறை; பல, பன்மை என்னும் பண்படியாகப் பிறந்த அகரவீற்றஃறிணைப்பெயர்; கால், காலம் என்பதின் கடைக்குறை.

24. உண்டு குணம் இங்கு ஒருவர்க்கு எனினும் கீழ்
கொண்டு புகல்வது அவர் குற்றமே வண்டு மலர்
சேக்கை விரும்பும் செழும் (ஐ) பொழில்வாய்
காக்கை விரும்பும் கனி. [வேம்பு அன்றோ ?

அந்வயம்	அர்த்தம்.
(1) செழும்பொழில் வாய் வண்டு, மலர்ச் சேக்கை விரும்பும்; காக்கை விரும்புங் கனி வேப்பன்றோ ?	வளப்பமான சோலையிலே வண்டுகள், பூப்படுக்கையை விரும்பும்; காகங்கள் தின்ன விரும்புவது அச்சோலையிலுள்ள வேப்பம்பழமல்லவா ?
(அதுபோல) (2) இங்கொருவர்க்கு (நல்ல) குணமுண்டெனினும், கீழ் (ஓர்) கொண்டு புகல்வது அவர் குற்றமே.	(அதுபோல) இவ்வுலகத்திலே ஒருவர்க்கு நற்குணங்களிருந்தாலும், அற்பர். பிறரறிபப் பேசுவது அந்நல்லார் குற்றங்களையேயாம்.

குறிப்பு.

உண்டு—இங்கு உடன்பாட்டுப்பொதுக்குறிப்பு வினைமுற்று; 'உண்' வினைச்சொல்லடியாகப்பிறந்த இறந்தகால வினையெச்சம் வேறு.

கொண்டு—ஒரு வேலையாக்கொண்டு என்றபடி.

புகல்வது—(புகல்+வ்+அ+து) எதிர்காலத்தொழிற்பெயர்.

குற்றம்--மனமொழி மெய்களாற்செய்யும் குற்றங்கள். அவை யாவன:-வேர்வை, மாசுமுதலிய மெய்க்குற்றம்; பொய் வன்சொல் முதலிய மொழிக்குற்றம்; காமம், வெகுளி மயக்கம் என்னும் மனக்குற்றம்.

வேம்பு-முதலாகுபெயராய் அதன் பழத்துக்காயிற்று; பதப் புணர்ச்சியில் மரப்பெயர்கள் பெரும்பாலும் அம்முச் சாரியை பெறும். உ-ம்.—புளி+காய்-புளியங்காய்; வேம்பு+பழம்-வேம்பம்பழம் முதலியன. 5

25. கல்லா(த) அறிவின் சயவர்பால் கற்று உணர்ந்த
நல்லார் தமது கனம் நண்ணார் ஏ வில் ஆர்
கணையில் பொலியும் கரு(மை) கண்ணாய்! நொய்து
புணையில் புகும் ஒண்(மை) பொருள். [ஆம்
(நண்ணாரே-ஏ, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
வில்லார்கணையிற் பொலியுங் கருங் கண்ணாய்!	வில்லில் தொடுத்து எய்யும் அம்பே போல விளங்குங்கண்ணுள்ள மாதே! (கேள்.)
(1) புணையிற் புகும் ஒண்பொருள் (அதற்கு) நொய்தாம்.	தெப்பத்திலேற்றிய கனமுள்ள பொருள், அதுதெப்பத்திற்கு இலேசாகவிருக்கும்.
(அதுபோல)	அதுபோல)
(2) கற்றுணர்ந்த நல்லார், கல்லாவறிவின் சுபவர்பாற் (சேர்ந்தால்) தமது கனம் (அத்தை) நண்ணார்.	வாசித்தறிந்த மேலோர் படிக்காத மூடரிடஞ்சென்றால், தங்களுடைய பெருமையைக் காப்பாற்றிக்கொள்ளமாட்டார். (அதாவது இழப்பார் என்றபடி.)

குறிப்பு.

அறிவு—அறி-பகுதி, வு-தொழிற்பெயர்விகுதி; 'உ' எனக்கொண்டால், வகரமெய் எழுத்துப்பேறும். இப்பகுதி, மற்றைப் புடைபெயர்ச்சிப்பொருள்விகுதிகளைப்பெற்று அறிகை, அறிதல், அறிப்பு, அறியல் எனவரும.

கணை—கண்ணுதலையுடையது; (கண்ணுதல்-குறித்தல்.) எனவே அம்பைக்குறிக்கும்; இது தொழிலடியாகப் பிறந்த 'ஐ' வினைமுதற்பொருள் விகுதி பெற்ற பெயர்; காக்கை, பிறை, புகை, வாழை முதலியன வேறு உதாரணங்களாம்.

பொருள்—ஐம்பொறிகளுக்குப் புலப்படுவது.

26 உடலின் சிறுமை கண்டு ஒண்(மை) புலவர் கல்வி
கடலின் பெருமை கடவார் மடவரால்!
கண் அளவாய் நின்றதோ? காணும் கதிர் ஒளிதான்
விண் அளவு ஆயிற்றோ விளம்பு?
(கதிரொளிதான் — தான். அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
மடவரால்! கதிர் ஒளி காணுங் கண்ணளவாய் நின்றதோ? (அல்லது) விண்ணளவு ஆயிற்றோ? (இதை நீ) விளம்பு. (இதைக்கருதி) ஒண்புலவர், (ஒருவர்) உடலின சிறுமையைக் கண்டு (அவரது) கல்விக் கடலின் பெருமை(யைக்) கடவார்.	இளம்பெண்ணே! (கேள்.) (ஒருவர்) பார்க்கும் சூரியப்பிரகாசம் அவர் கண்ணளவாய்க் குறுகியிருக்குமோ? (அல்லது) ஆகாயத்தினளவாய் (ப்பெருகி) இருக்குமோ (இதனைச்) சொல்? (இதைக்கருதி) அறிவால் விளங்கும் புலவர், (மற்றொரு புலவரின்) உடலின் சிறுமையைப் பார்த்து, (அவரது) கல்வியாகிய கடலினது பெருமையைக் கடக்கநினையார்.

குறிப்பு.

கண்டு — (காண்+ட்+உ) இறந்தகாலவினையெச்சம்; இது பெயர்ச்சொல்லாயின், கற்கண்டு என்று பொருள்படும்.

கடவார் — (கட-வ்-ஆ-ஆர்) வகரவிடைநிலை எதிர்காலத்தைக் காட்டாமல், தன்மையைக்காட்டும்; எதிர்மறை ஆகாரம் கெட்டது; இவ்வாறன்றி, உதவார் என்பது போலக் கட-வ்-உ-ஆ-ஆர் எனப்பிரித்து, 'வ்' உடன்படுமெய், 'உ' சாரியை என்றலும் பொருந்தும்.

கதிரொளி — ஒருபொருட்பன்மொழியாயினும், இங்குக் கதிர் என்பது ஆகுபெயராய்ச் சூரியனைக்குறிக்கும்.

27. கைம்மாறு உகவாமல் கற்றறிந்தோர் மெய் வருந்தித்
தம்மால் இயல் உதவி தாம் செய்வர் அம்மா!
முளைக்கும் எயிறு முதிர் சுவை நாவிற்கு
விளைக்கும் வலியன தாம் மென்று.

அந்வயம்	அர்த்தம்.
(1) முளைக்குமெயிறு, வலியன (வற்றைத்) தாம் மென்று, முதிர்சுவையை நாவிற்கு விளைக்கும்.	(விழுந்து) முளைக்கின்ற பற்களானவை வலியதின்பண்டங்களைத் தாமே மென்று நல்ல சுவையை நாவிற்குண்டாக்கும்.
(அதுபோல)	(அதுபோல)
(2) கற்றறிந்தோர், கைம்மாறுகவாமல் தம்மாலியல் உதவி (யைத்) தாஞ் செய்வர்.	கல்வியறிவுடையோர், பிரதியுபகாரம் வேண்டாமலே, அதிக உழைத்துத் தங்களாற் கூடிய உதவியை (ப்பிறர்க்குச்) செய்வர்.

குறிப்பு.

கற்று—இறந்தகாலவினையெச்சம்; அறிந்ததற்குக்காரணத்தை உணர்த்தியது; 'உண்டு பசிஆறிற்று' என்பதுபோல.

அறிந்தோர்—அறி என்னும் வினைச்சொல்லடியாகப் பிறந்த இறந்தகாலவினையாலணையும்பெயரும், அறிவுடையோர் எனக் குறிப்புவினையாலணையும் பெயரும் பிறக்கும். அறிஞர், அறிவர், முதலியவை இப்பகுதியடியாகவரும் பெயர்கள். இவற்றில் ஞ், வ் பெயரிடைநிலைகளாம்.

அம்மா—வியப்பிடைச்சொல்; அன்றியும் மகடூஉ முன்னிலையாகக்கொள்ளினும் பொருந்தும்.

வலியன—பலவின்படர்க்கைப்பெயர்; இப்பெயர்கள் வேற்றுமைப்படும்போது அற்றுச்சாரியை பெற்றே வரும்.

* அரும்பதவிளக்கம் காண்க.

28. முனிவினும் நல்குவர் முது(மை) அறிஞர் உள்ளம்
கனிவினும் நல்கார் கயவர் நனி விளைவு இல்
காயினும் ஆகும் கதலிதான் எட்டி பழுத்து
ஆயினும் ஆமோ அறை?

(கதலிதான்—தான், அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
(1) நனி விளைவில் கதலி, காயினும் ஆகும்; எட்டி பழுத்தாயினும் ஆமோ அறை? (அதுபோல) (2) மூதறிஞர், முனிவினும், நல்குவர்; கயவர் உள்ளம் கனிவினும், நல்கார்.	நன்றாய்ப் பழுக்காத வாழை, காயானாலும் (கறிக்கு) உதவும்; எட்டிக்காய் அளியப்பழுத்தாலும் தின்ன உதவுமோ சொல்? (அதுபோல) பேரறிஞர், கோபித்திருந்தாலும் (பிறர்க்குக்) கொடுப்பர்; மூடர் மனமகிழ்ந்திருக்குங் காலத்திலும் கொடார்.

குறிப்பு.

உள்ளம்—உள்ளுதற்குக்கருவியாயுள்ளது என மனதிற்குக் காரணக்குறி; (உள்ளுதல்-நினைத்தல்) ஆக்கம், ஊற்றம் நாட்டம், நோக்கம் முதலியவற்றைப்போல 'அம்' கருவிப்பொருள்விகுதி பெற்ற பெயர்.

கயவர்—கய-பண்புப்பெயர்ப்பகுதி; பெருமையுடையோர் என்பது பொருள். இப்பகுதி, அம்- மை- வு- பகுதிப் பொருள்விகுதிகளைப்பெற்று, முறையே கயம், கயமை, கயவு என வரும். தூய்மையான உள்ளம் எனப் பொருள்படும் அழுக்காறு என்பது, எதிர்மறை *இலக்கணையாய்ப்பொருளைக்கானதுபோல, இச்சொல் கீழ் மக்களுக்கானது வழக்கு, இதை *மங்கல வழக்கென் பாருமுளர். (*அரும்பத விளக்கம் காண்க.)

29. உடற்கு வரும் இடர் நெஞ்சு ஓங்கு பரத்து உற்றோர்
அடுக்கும் ஒரு கோடியாக நடுக்கம் உறார்
பண்ணில் புகலும் பனிமொழியாய்! அஞ்சுமோ?
மண்ணில் புலியை மதிமான்.

அன்வயம்.	அர்த்தம்.
பண்ணிற் புகலும் பனிமொழியாய்! (1) மதிமான் மண்ணிற் புலியை அஞ்சுமோ? (அதுபோல)	யாழைப்போல் குளிர்ந்த சொல்லுடைய பெண்ணே! (கேள்.) சந்திரனிடத்திலுள்ள மான பூமியிலுள்ள புலிக்கஞ்சுமோ? (அதுபோல)
(2) நெஞ்சோங்கு பரத்துற்றோர் - உடற்கு வருமிடர் ஒரு கோடியாக (இருந்தாலும்) நடுக்கமுறார்.	தம்மனதை, உயர்ந்த பதவியில் இருக்கும் கடவுளிடத்தே வைத்த ஞானிகள், தமமுடைய உடலுக்கு அடுக்கடுக்காய் வரும் பல துன்பங்களுக்கு அஞ்சார்.

குறிப்பு.

நெஞ்சு—மனதுக்கு இடவாகுபெயர்; இல்லம், உடலம் கதவம், குன்றம், துபரம, மதிபம், மலையம் என்பவற்றைப்போல, நெஞ்சம் என 'அம்' சாரியை பெறும்.

உற்றோர்—உறு-பகுதி, ஆர்-ஓர் ஆனது விகுதி; அற்று' இற்று, பெற்று என்பவற்றைப்போலப் பகுதி ஒற்று இரட்டிவந்தது. கு, டு, று வீற்றுச்சில முற்றியலுகர வினைப்பகுதிகள், இறந்தகாலத்தில் ஒற்று இரட்டிவரும். அடு, இடு, சுடு, தொடு, படு, நடு, விடு முதலியவைகளும் - தகு, நகு, பகு,புகு, மிகு முதலியவைகளும் வேறு உதாரணங்களாம்.

ஒருகோடி—மிகப்பல எனப் பொருள்படும் ஒரு குறிப்பு.

பனிமொழி—உள்ளன்பினால் கூறும் மொழிகள்.

பண்ணில்—'இல்' உவமையுருபு; போல என்பது பொருள்.

மண்ணில்—'இல்' ஏழாம்வேற்றுமையுருபு.

30. கொள்ளுங் கோடு(மை) கூற்றங் கொல்வான் குறுகுதல்
உள்ளம் கனிந்து அறம் செய்து உய்கவே [முன்
வருவதற்கு முன்னர் அணை கோலிவையார் [வெள்ளம்
பெருகுதல் கண் என் செய்வார் பேசு ?

(செய்துய்கவே—ஏ, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
வெள்ளம் வருவதற்கு முன்னர் அணை கோலி வையார் பெருகுதற்கண் என் செய்வார்? (நீ)பேசு.	வெள்ளம் வருவதற்குமுன் கரை கட்டி அதைத் தடுக்காதவர்கள், வெள்ளம் வந்தபோது என்ன செய்வார்கள் நீ? சொல்.
(ஆகையால்) கொள்ளுங்கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன் உள்ளங்கனிந்தறஞ்செய்து (நீ) உய்க.	(ஆகையால்) (உயிரைக்) கொண்டு போகும் கொடியயமன் கொல்லும்படி கிட்டுமுன்னே மனங்கரைந்து தருமஞ் செய்து பிழைக்கக்கடவாய்.

குறிப்பு.

கூற்றம்—(கூற்று + அம்) அம்-சாரியை ; யமனுக்குக்காரணக் குறி; காரணவிடுகுறியாய்ச் சொல்லைக் குறிக்கும்.

கொல்வான்-வான்-நிகழ்கால வினையெச்ச விகுதி.

வெள்ளம்—வெள்-பகுதி, அம்-பண்புப்பெயர்விகுதி; ஆகுபெயராய் நீர்ப்பெருக்கைக் குறிக்கும். மலையநாட்டார் நன்னீரை வெள்ளம என்பதிலும் காண்க.

முன்னர்—பண்புப்பெயர் ; முன்-பகுதி, நர்-பகுதிப்பொருள் விகுதி ; ஆகுபெயராய்க் காலத்தை உணர்த்திற்று ; இடத்தையும் உணர்த்தலுமுண்டு.

பெருகுதற்கண்—ஏழாம்வேற்றுமையுருபாகக் கொள்ளாமல் இறந்தகாலவினையெச்சவிகுதியாகக்கொள்ளவும். இங்கு எதிர்காலத்தை இறந்தகாலத்திற்கூறுவது வழுவமைதி.

31\. பேர் அறிஞர் தாக்கும் பிறர் துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் நேர் இழாய்?
மெய் சென்று தாக்கும் வியல் கோல் அடி தன் மேல்
கை சென்று தாங்கும் கடிது.

(தாங்கியே—ஏ, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
(1) மெய் சென்று தாக்கும் வியன் கோலடி (யைக்) கைகடிது சென்று தன்மேல் தாங்கும்.	உடம்பின்மேலேபோய்ப்படும் பெரிய கோலின் அடியைக் கையானது விரைவிற்சென்று தன்மேல் ஏற்றுக்கொள்ளும்.
(அதுபோல)	(அதுபோல)
(2) பேரறிஞர், பிறரைத்தாக்குந் துயரம் (அத்தை) வீரமொடுதாங்கிக்காக்க விரைகுவார்.	மிக்க அறிவுடையோர் பிறரை வருத்துந் துன்பத்தைத் தாம் தாங்கி, அத்துன்புற்றவரைக்காக்கக்கடிது செல்வார்.

குறிப்பு.

பேரறிஞர்-(பெருமை + அறிஞர்) பெருமை-பேர் என விகாரப்பட்டது. சில பண்புப்பெயர்கள் வருமொழியோடு புணரும்போது முதல் நீண்டொலிக்கும்: ஆருயிர், ஓராயிரம் காராடு, பார்வேந்தர், மூதுரை முதலியன வேறு உதாரணங்களாம்.

மெய்—பொய்யான உடலை மெய் எனல் மங்கலவழக்கு; அன்றியும் மெய்யாய் விளங்கும் உயிர், தன்னுள் தங்கியிருத்தலால், தானியாகுபெயராம்.

விரைகுவார்—கு, சாரியை; வ, தன்மையுணர்த்தும்.

சென்று; கடிது — சென்று இறந்தகாலத்தெரிநிலை வினையெச்சம். கடிது-கடி-உரிச்சொல் பகுதி; கடுமை எனில் பண்படியாம்; எவ்வாறாயினும், 'த்' எழுத்துப்பேறு; 'உ' வினையெச்ச விகுதி; தெரிநிலையில் 'த்' இடைநிலை.

32. பன்னும் புனுவல் பயன் தேர் அறிவு இ(ல்)லார்
மன்னும் அறங்கள் வலி இலவே நன்(மை)நுதால்!
காழ் ஒன்று உயர் திண் கதவு வலி உடைத்தோ?
தாழ் ஒன்று இலது ஆயின் தான்.

(இலதாயிற்றூன்—தான், அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
நன்னுதால்!	அழகிய நெற்றியுடையவளே!
(1) தாழொன்றில தாயின், காழொன்றுயர் திண் கதவு, வலியுடைத்தோ?	வயிரம்பற்றிய உயர்ந்த கதவு, தாழக்கோலொன்றிலதானுற் பல முடையதாகுமோ? (ஆகாதென்ற படி.)
(அதுபோல)	(அதுபோல)
(2) பன்னும் பனுவற் பயன்றேர் அறிவிலார் மன்னும் அறங்கள் வலியிலவே.	உயர்வாகச் சொல்லும் சாத்திரங்களின் பயனை அறியாத மூடர் செய்யுந்தருமங்கள் (எப்போதும்) நிலைத்திருக்காவாம்.

குறிப்பு.

பனுவல்—பன், உ, அல் எனமுறையே பகுதி, சாரியை, விகுதிகளாம்; பன்னுதல்-சிறப்பித்துச்சொல்லுதல்; எனவே அறநூல்களுக்காயிற்று.

தேர்—ஆராய்ந்தறிதல் எனப்பொருள்படும் முதனிலைத் தொழிற்பெயர்; புடைபெயர்ச்சிப்பொருள் விகுதிகளைப்பெறின், தேர்ச்சி-தேர்தல்-தேர்வு என வரும்.

காழ்—கார் (கறுப்பு) என்பதின் விகாரம்; வயிரம்பற்றிய பொழுதே மரம் கருமை கொள்ளுதல் இயல்புபற்றிக் காழ், மரவயிரம் எனப்பொருள்படும்; காரகில் என்பதிலும் இப்பொருளாதல் காண்க.

தாழ்—தாழ்ப்பாள்; தாள், தாட்பாள் எனவும் வழங்கும்.

33. எள்ளாது இருப்ப இழிஞர் போற்றற்கு உரியர்
விள்ளா அறிஞர் அது வேண்டாரே தள்ளா
கரை காப்பு உளது நீர் கட்டு குளம் அன்றி
கரை காப்பு உளதோ கடல்?

அந்வயம்.	அர்த்தம்.
(1) நீரைக்கட்டும் குளம், கரை காப்புளதன்றிக் கடல், கரை காப்புளதோ? (அதுபோல) (2) இழிஞர், எள்ளாதிருப்பப் போற்றற்குரியர்; விள்ளா அறிஞர், அது (ஐ) வேண்டாரே.	தண்ணீரைக் கட்டிவைக்கின்ற குளம் (முதலிய சிறுநீர்நிலைகள்) கரையைக் காவலாக உடையதன்றிப் பெரிய கடல், உடையதன்று. (அதுபோல) அற்பர்கள் (தாம் பிறரால்) இழிவடையாதிருக்கக் கொண்டாடப் படுதற்குரியவர்; நீங்காத அறிவுடையார், அதை விரும்பார்.

குறிப்பு.

விள்ளா—ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; (1) எதிர்மறையிடைநிலை 'ஆ' விகுதியளவாய் நின்று எதிர்காலத்தைக்காட்டும். (2) இல்லாப்பொருள், அல்லாக் காரியம் என்னும் குறிப்புப்பெயரெச்சங்களில் பகுதிகளே எதிர்மறைப்பொருளாவனவாதலின், ஆ-சாரியையாம். (3) ஆகார விகுதியை இறுதியில் உடைய வினைச்சொல், அஃறிணைப்பலவின்பாற்படர்க்கை எதிர்மறைத்தெரிநிலைவினைமுற்றும். உ-ம்:—அவை நடவா. (4) குறிப்புவினைமுற்றில் 'ஆ' விகுதி வாராது. மற்றைக் குறிப்புக்களுக்கு, இந்நூல் பக்கம்: 23-30. காண்க.

கரைகாப்பு—கரையாகிய காப்பு எனப் பண்புத்தொகையாகவும், கரையைக்காப்பாகவுடையது என வேற்றுமைத்தொகையாகவுங்கொள்ளலாம்; கரை-நீர்நிலையின் முடிவு; காப்பு-காவல்; இவை தொழிலாகுபெயர்கள்.

34. அறிவுடையார் அன்றி அது பெறார் தம்பால்
செறி பழியை அஞ்சார் சிறிதும் பிறை நுதால்?
வண்ணம் செய் வாள் விழியே அன்றி மறை குருடு
கண் அஞ்சுமோ? இருளை கண்டு.

அந்வயம்.	அர்த்தம்.
பிறைநுதால்! (1) வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்கண், இருளைக்கண்டஞ்சுமோ? (அதுபோல) (2) அறிவுடையாரன்றி அதுபெறார் தம்பாற் செறிபழி (க்குச்) சிறிதும் அஞ்சார்.	பிறைபோன்ற நெற்றியாளே! (மை தீட்டல் முதலிய) அழகு செய்து விளங்குங் கண்களேயன்றி, இருண்ட குருட்டுக்கண் இருட்டைக்கண்டு பயப்படுமோ? (அதுபோல) அறிவுடையவரே அல்லாமல், அவ்வறிவைப்பெறாத மூடர், தங்களை அணுகும் பழிபாவங்கட்குக் கொஞ்சமேனும் பயப்படார்.

குறிப்பு.

பழி—பழிக்கப்படுவது என உலகநிந்தைக்காயிற்று; அணி, உரி, உரை, கோள், துணி, பாட்டு, புணை, பூண், மலை, துணி, சார், மொழி முதலியவற்றைப் போலச் செயப்படுபொருள் விகுதி 'ஐ' கெட்ட பெயர்.

பிறை—'பிறப்பது பிறை' என இளஞ்சந்திரனுக்குக்காரணக் குறி; இறை, ஓடை, கறவை, காக்கை, படை (சேனை), பறவை, புகை, வெள்ளை, வாழை முதலியவற்றைப் போல வினைமுதற்பொருண்மை விகுதி 'ஐ' பெற்ற பெயர்.

செய்—இது, செயல்-செய்குதல்-செய்கை-செய்தல்-செய்தி செய்யுள் எனப்புடைபெயர்ச்சிப்பொருள் விகுதிகளைப் பெறும்

இருள்—பண்பாகுபெயராய் இராக்காலத்தைக் குறிக்கும்; இருட்டு என்பதில், 'டு' பகுதிப்பொருள் விகுதியாம்.

35. கற்ற அறிவினரை காமுறுவர் மேன்(மை)மக்கள்
மற்றையர் தாம் என்றும் மதியார் ஏ வெற்றி நெடும்
வேல் வேண்டும் வாள் விழியாய்! வேண்டா [ஐ
பால் வேண்டும் வாழை பழம். [புளி காடி

மற்றயர்தாம்—தாம், அசை. | மதிபாரே ஏ, அசை.

அந்வயம்.	அர்த்தம்.
வெற்றி நெடு வேல் வேண்டும் வாள் விழியாய்!	வெற்றிபெறும் நீண்ட வேல் போன்ற ஒளியுள்ள கண்களையுடையவளே! (கேள்.)
(1) பால் வாழைப் பழத்தை வேண்டும்; புளிங்காடி வேண்டா.	வாழைப்பழத்தைப்பால் விரும்பும்; புளித்த காடி (அப்பழத்தை) விரும்பாது.
(அதுபோல)	(அதுபோல)
(2) மேன்மக்கள், கற்ற அறிவினரைக் காமுறுவர்; மற்றையர் என்றும் மதியார்.	மேலோர், (நூல்களைக்) கற்ற அறிவுடையோரை விரும்புவர்; கீழோர், அவ்வறிஞரை எப்பொழுதும் மதிக்கமாட்டார்.

குறிப்பு.

மற்றையர்—(மற்று-ஐ-அர்.) பிறிது என்னும் பொருள் பட நின்ற மற்று, இடைச்சொல்லடியாகப்பிறந்த பலர் பாற்பெயர்; உம்மை, கொன்னை என்பன போல 'ஐ' சாரியைபெற்றது; சாரியையின்றிமற்றவர் என வரும்.

வெற்றி—வெல்-பகுதி, தி-தொழிற்பெயர் விகுதியாம்; இது றகரமெய்மெலிந்து வென்றி எனவும், மற்றைப் புடைபெயர்ச்சிப் பொருள் விகுதிகளைப்பெற்று வெல்லல், வெல்லுதல், வேறல், வெல்வி எனவும் வரும்.

வேல்—வெல்வது வேல் எனக் காரணக்குறி; கேடு, வீடு, ஊண், தீன், கோல், கோள், பேறு முதலியவற்றைப் போல முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; வேல் எறிதல், அம்பு எய்தல், எனல் வழக்காம்.

36. தக்கார்க்கே ஈவர் தகார்க்கு அளிப்பார் இல்(லை) என்று
மிக்கார்க்கு உதவார் விழுமியோர் எக்காலும்
நெல்லுக்கு இறைப்பதே நீர் அன்றி காடு முளி
புல்லுக்கு இறைப்பரோ போய்?

அன்வயம்.	அர்த்தம்.
(1) எக்காலும் நெல்லுக்கே நீர், இறைப்பதன்றிக் காட்டுமுளி புல்லுக்குப் போய் இறைப்பரோ?	(பயிரிடுவோர்) எந்நாளும் நெற்பயிருக்கே நீர்ப்பாய்ச்சுவதன்றிக் காட்டிலுலரும்புல்லுக்குப்போய்ப் பாய்ச்சுவார்களோ? (பாய்ச்ச மாட்டார்கள் என்றபடி.)
(அதுபோல)	(அதுபோல)
(2) விழுமியோர், தக்கார்க்கே (பொருளை) ஈவர்; தகார்க்களிப்பரில்லென்று மிக்கார்க்குப் (பொருளை) உதவார்.	மேலோர் நல்லவர்களுக்கே பொருளைக் கொடுப்பர்; அயோக்கியருக்கு எவரும் தருகிறதில்லையென்று தெரிந்து அவர்களுக்குப் பொருளைக் கொடார்.

குறிப்பு.

என்று—இடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புவினையெச்சம்; என்,று முறையே பகுதி விகுதிகளாம். 'உன்னை இனி என்று காண்பேன்?' என்பதில், என்று என்பது காலப்பொருளுணர்த்தும் வினா இடைச்சொல்; 'என்றும் கொடுப்பர்' எனபதில் 'எ' வினாப்பொருளிழந்தது. அன்று (அற்றை)-இன்று (இற்றை)-என்பவை, காலப்பொருளுணர்தும் சுட்டிடைச்சொற்களாம்.

விழுமியோர்—பண்படியாகப்பிறந்த பலர்பாற்படர்க்கைப் பெயர்; விழுமு-பகுதி, இ-சாரியை, ஆர்-விகுதி, 'ஆ' 'ஓ' ஆனது செய்யுள் விகாரம்.

போய்—இறந்தகால வினையெச்சம்; (போ-ய்) ய், இறந்த காலம் காட்டும் வினையெச்சவிகுதி. 'போயினான்' என்பதில் 'ய்' எழுத்துப்பேறு.

37. பெரியோர்முன் தன்னை புனைந்து உரைத்த பேதை
தரியாது உயர்வு அகன்று தாழும் தெரியாய்கொல்
பொன் உயர்வு தீர்த்த பொலி முகத்தாய் விந்தமலை
தன் உயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து.

அந்வயம்.	அர்த்தம்.
பொன்னுயர்வுதீர்த்த பொலி முகத்தாய்! விந்தமலை தாழ்ந்து தன் உயர்வு தீர்ந்தன்று, (நீ) தெரியாய் கொல். (இதைக்கருதி) பெரியோர் முன் தன்னைப் புனைந்துரைத்த பேதை, உயர்வு தரியாத கன்று தாழும்.	இலட்சுமியும் அழகில் தோற்கும்படி விளங்கும் முகத்தாளே! விந்தமலை (அகஸ்தியரால்) அடக்கப்பட்டுத் தன் உயர்வு தாழ்ந்ததை அறியாயோ? (இதைக்கருதி) அறிவுடையோர்முன் தன்னைப் புகழ்ந்து பேசியமூடன் தன் நிலையில் நிற்காமல் சிறப்பிழந்து தாழ்வடைவான்.

குறிப்பு

பேதை—(பேதமை-மடமை) பண்பாகுபெயராய் மூடனைக் குறிக்கும்; அன்றியும் நற்குணமுள்ள பெண்ணுக்கு ஒரு பெயர்; பேதாய் என்பததன் விளி.

தாழ்ந்து—இறந்தகால வினையெச்சம்; து (த்+உ), இடைநிலையும் விகுதியுமடங்கியுள்ளது.

தீர்ந்தன்று—தீர்ந்தது எனப்பொருள்படும் இறந்தகால உடன்பாட்டு வினைமுற்று; 'று' விகுதி, தடறவொற்றிடைநிலைகளின் முன் (1) 'அன்' சாரியை பெற்று முறையேதீர்ந்தன்று-கண்டன்று-சென்றன்று-எனவும் (2) ஒடிற்று-கூவிற்று-போயிற்று எனச்சாரியை பெறுமல் 'இன்' இடைநிலையோடுமாத்திரம் கூடிவரும்.

தீர்ந்தின்று—இறந்தகால எதிர்மறைவினைமுற்று; தீர்-(த்×ந)-த்-(இல்×இன்)-று; இதில் 'இல்' எதிர்மறையிடைநிலை; தீர்ந்ததில்லை என்பது பொருள்.

38. நல்லார் செய்யும் கேண்மை நாள் தோறும் நன்று
அல்லார் செய்யும் கேண்மை ஆகாது ஏ நல் [ஆகும்
காய் முற்றின் தின் தீம் கனி ஆம் இளம் [லாய் கேள்
போய் முற்றின் என் ஆகி போம்? [தளிர் நாள்

(ஆகாதே—ஏ, அசை.)

அந்வயம்.	அர்த்தம்.
நல்லாய்! கேள். (1) காய் (நாள்போய்) முற்றிற் றின்றீங்கனியாம்; நாள்போய் இளந் தளிர்முற்றினென்னுகிப் போம்? (அதுபோல) (2. நல்லார் செய்யுங் கேண்மை, நாடோறும் நன்றாகும்; அல்லார் செய்யுங் கேண்மை ஆகாது.	நற்குணமுள்ளவளே! கேள். காயானது நாள்சென்று முற்றினுல் தின்னுதற்குரிய இனிய பழமாகும்; நாள்சென்று, இளந் துளிர் முற்றினுல், என்ன ஆகும்? (தின்ன உதவாது என்றபடி.) (அதுபோல) நல்லோர் செய்யும் சிநேகம், நாள்தோறும் நன்மை விளைக்கும்; தீயோர் செய்யும் நட்பு, தீமை உண்டாக்கும்.

குறிப்பு.

நாடோறும்—(நாள்+தோறும்.) நாள்-தினம்; (நல்லநாள் அசுவனி முதலிய நாண்மீன்களொன்றைக் குறிக்கும்.) தோறும், இங்குக்காலப்பன்மைப்பொருளுணர்த்தும் இடைச்சொல்; 'ஊர்தோறுஞ்சிவாலயம்' என்பதில், தோறும் இடப்பன்மைப்பொருளது; இது தொறும், தோறு, தொறு எனவும் வழங்கும்.

நல்லாய்—அழகுடையவள் என்று பொருள்படும் நல்லாள் என்பதினீறு திரிந்த விளி; நல்லான் என்னும் ஆண் பாற்சொல்லின் விளியுமிது. நல்லார் என்பது சிறப் பாய்ப் பெண்களைக் குறிக்கும்;நல்லீர் எனபததன்விளி.

தின்கனி—வினைத்தொகை; தீங்கனி (இனியகனி), தீக்கனி (கெட்டகனி), இவை இரண்டும் பண்புத்தொகைகள்.

39. கற்று அறியார் செய்யும் கடு(மை) நட்பும் தாம் கூடி
உற்று உழியும் தீமை நிகழ்வு உள்ளது ஏ பொன்
சென்று படர்ந்த செழும் (ஐ) கொடி [தொடீ
அன்றே மணம் உடையது ஆம் [மென் பூ மலர்ந்த

அந்வயம்.	அர்த்தம்.
பொற்றொடீ! (1) சென்று படர்ந்த செழுங் கொடி மென்பூ, மலர்ந்த அன்றே மணமுடையதாம். (அதுபோல) (2) கற்றறியார், செய்யுங்கடு நட்பும் தாங்கூடியுற்றுழியுங் (முடிவில்) தீமை நிகழ்வு (ஐ)ஏ உள்ளது.	பொன் வளையலணிந்தவளே! நீண்டு படரும் கொழுங்கொடியினது மிருதுவான பூ, மலர்ந்த அன்றைக்கு மாத்திரமே வாசனை உளது; மறுதினம் வாடிவதங்கும். (அதுபோல) மூடர் செய்கிற நெருங்கிய நேசம், அவர் (எவ்வளவு ஒன்று) கூடியிருந்தபோதிலும் (நாளடைவில்) அவர்களுக்குக் கெடுதியை விளைத்தலையே யுடையது.

குறிப்பு.

நட்பு—சிநேகி எனப்பொருள்படும். 'நள்' பகுதி, 'பு' தொழிற்பெயர் விகுதி; இது, டகரமெய் மெலிந்து நண்பு எனவும் வரும். நள்ளிருள், நண்பகல் முதலியவற்றில், 'நள்' இடைச்சொற்பகுதி, மிகுதிப்பொருளது; நட்பு, பொருளாற்பண்புப்பெயர்.

கொடி—பண்படியாகப்பிறந்த ஒன்றன் படர்க்கைப்பெயர்; கொடுமை (வளைவு) பகுதி, 'இ' ஒன்றன் படர்க்கை விகுதி, உகரக்கேடு சந்தி.

பூ—பூப்பது-பூ; தொழிலடியாகப்பிறந்தவினைமுதற்பொருள் விகுதி 'இ' கெட்ட பெயர்; இவ்வாறன்றி, முதனிலைத் தொழிலாகுபெயரென்றலுமொன்று. கிளை, தளிர், மலர், காய், கனி, பா, வளை, சுழி, திரை, பிணி முதலியவை வேறு உதாரணங்களாம்.

40. பொன் அணியும் வேந்தர் புனையா பெரும்(ஐ) கல்வி
மன்னும் அறிஞரை தாம் மற்று ஒவ்வார் மின்னும்
பூணும் பிற உறுப்பு பொன்னே! அது புனையா [அணி/மணி
காணும் கண் ஒக்குமோ? காண்.

இப்பாட்டிலுள்ள அசைகள்.
- அறிஞரைத்தாம்—தாம், அசை.
- மற்றொவ்வார்—மற்று, அசை.
- காண்—முன்னிலை அசை.

அந்வயம்.	அர்த்தம்.
பொன்னே ! (1) மின்னுமணி பூணும்பிறவுறுப்பு(க்கள்,) அது புனையா(மல் தாம் அணிந்திருப்பதினழகைக்) காணுங் கண் ஒக்குமோ? (அதுபோல) (2) பொன்னைப் புனையாமல், மன்னும் பெருங்கல்வி அறிஞரைப் பொன்னணியும் வேந்தர் ஒவ்வார்.	இலட்சுமிபோல அழகுடையாளே ! பளபளவென்று பிரகாசிக்கும் நகைகளை யணிந்து அவற்றினழகைப் பார்க்கமுடியாத (கை கால் முதலிய) மற்ற உறுப்புக்கள், (அவ்வணிகளை) அணியாமலே (அவற்றின் அழகைப்) பார்க்கும் கண்களுக்கு ஒப்பாகுமோ? (ஒப்பாகாவென்றபடி.) (அதுபோல) (நிலையில்லாத) பொன்னகைகளையணியாமல் நிலைபெற்ற பெருங்கல்வியை (அணியாகவணிந்த) அறிவுடையோர்க்கு அப்பொன்னாபரணமணிந்த அரசர் (எவ்வாற்றாலும்) ஒப்பாகார் (என்றபடி.)

குறிப்பு.

பொன்—பொன்னாலாகிய நகைகளுக்குக் கருவியாகுபெயர்.
ஒவ்வார், ஒக்குமோ? இவற்றில், 'ஒ' பகுதி.
உறுப்பு, கண்—ஒவ்வொன்றும் சாதியொருமை

நன்னெறியிலுள்ள உவமைச்சொற்கள்

பாட்டு	உபமானம்	உபமேயம்	பொதுத்தன்மை
7	கடல்.	கல்வி.	அளவிடக்கூடாததற்கும், ஆழ்ந்த பொருளுடையதற்கும், பலதுறைகளுள்ளதற்கும்.
34	பிறை.	(பெண்) நெற்றி.	வளைந்தவடிவும், குளிர்ந்த ஒளியும், பார்ப்போரை மகிழ்விக்கும் தன்மையும்.
6	மதி.	(பெண்) முகம்.	வட்டவடிவிலும், குளிர்ந்த ஒளியிலும், பலராலுமதிக்கபடுவதாலும்.
17	அரம்பை. (வாழை)	சந்ததி.	இடையறுது தொடர்ச்சியாய் வருவதற்கு.
35	வேல்.	(பெண்) கண்.	கூரிய வடிவும் ஆடவரை வருத்தும் தன்மையும்.

நன்னெறிச் செய்யுட்களில் வரும் சில இடைச்சொல் ஏகார ஓகார உம்மைகளுக்குப்பொருள்.

பாட்டு	சொல்	பொருள்	பாட்டு	சொல்	பொருள்
7	கடலே	பிரிநிலை	36	எக்காலும்	முற்று
36	தச்சார்க்கே	,,	16	சுழியினும்	இழிவு சிறப்பு
25	நண்ணாரே	தேற்றம்	7	கன்றும்	எச்சம்*
32	வலியிலவே	,,	6	காதலனும்	எண்
8	குணமே	பிரிநிலை தேற்றம்	5	புல்லினும்	எதிர்மறை
34	விழியே	,,	14	உரைக்கும்	உயர்வு சிறப்பு
2	சுவையா	வினா.			
1	புகழவோ	ஒழியிசை			
17	மறப்பரோ	எதிர்மறை			

*ஈண்டுத் 'தாய்வாழைஉதவியதன்றி' என்னும் பொருளாதலால் இறந்ததுதழீஇயவெச்சம்; அஃதன்றேல் எதிரதுதழீஇயவெச்சமாம்.

நன்னெறிச் செய்யுட்களை அனுபவிக்கும் பொழுது அனுசரிக்கவேண்டிய பொருள்கோள்வகைகள்.

07/KSP/N 123

<u>மொழிமாற்றுப்பொருள்கோள்</u>—ஒரே அடியில், இரண்டு சொற்கள் முன்பின்னாக மாறுதல்: அதாவது ஒரே அடியிலிள்ள இரண்டு பயனிலைகளுக்குப் பொருத்தமான சொற்கள், அப்பயனிலைகளைத் தொடராமல், முறைபிறழ்ந்து வந்தால், அவற்றையெடுத்து அவ்வவ்வற்றிற்குப் பொருத்தமான பயனிலைகளுடன் கூட்டிப் பொருள் கொள்வது மொழிமாற்றுப்பொருள்கோளாம்.

உ-ம் :—(பாட்டு. 4) “கருங்கடனீர் சென்று புயன் முகந்து” என்பதைப் ‘புயல்சென்று கருங்கடனீரைமுகந்து’ என இயைத்துப் பொருள் கொள்ளுதலாம்.

<u>கொண்டுகூட்டுப்பொருள்கோள்</u>—வெவ்வேறு அடிகளிற் சிதறிக்கிடக்குஞ் சொற்களைக் கொண்டுவந்து பொருட்கேற்ப ஒருவரிசையாகச்சேர்த்துப் பொருள் கொள்ளுதலாம்.

உ-ம் :—(பாட்டு. 10) “தங்குறைதீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம் வெங்குறைதீர்க்கிற்பார் விழுமியோர்.” என்பதை ‘விழுமியோர் தங் குறைகளைத்தீர்வுள்ளார்; பிறர்க்குறும்வெங் குறைகளைத்தளர்ந்து தீர்க்கிற்பார்,’ என இயைத்துப் பொருள் கொள்ளுதலாம்.

<u>தாப்பிசைப்பொருள்கோள்</u> – ஊஞ்சற்கயிறு நடுவினின்று முன்னும்பின்னுமாக அசைந்து செல்வதுபோலச் செய்யுளில் நடுநின்ற ஒருமொழி முன்னும் பின்னுமாயிருபுற முஞ்சென்று மொழிகளைக்கூட்டுவது தாப்பிசைப்பொருள் கோளாம்.

128531

உ-ம் :—(பாட்டு. 19) "திருந்துந் தளிர்காட்டித் தென் றல்வரத் தேமா வருந்துஞ் சுழல் கால் வர" இச்செய்யுளில் நடுநின்ற 'தேமா' என்னுமொழி 'தென்றல் வரத் தளிர்காட்டித்திருந்தும்.' என அதே அடியிற்பின்னே சென்று பொருள்கொள்ளுதலும், 'சுழல்கால்வர வருந்தும்.' என அடுத்த அடியின் முன்னே சென்று பொருள் படுதலுங் காண்க.

பூட்டுவிற்பொருள்கோள்—இருகோடியிலும் நாணிபூட்டப் படுதலையுடைய வில் போலச் செய்யுளின் முதன்மொழியும் இறுதிமொழியுங்பொருளிற்பொருந்துவது விற்பூட்டுப்பொருள்கோளாம்.

உ-ம் :—(பாட்டு. 31) "பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே வீரமொடு காக்க விரைகுவார்." இச்செய்யுளின் முதன்மொழி பேரறிஞர், கடைமொழி விரைகுவார் ; இவ்விரண்டையும் ஒன்றுகூட்டும் பொழுது பொருள் பொருந்துவது காண்க.

யாற்றுநீர்ப்பொருள்கோள்—திரும்பாமலே ஓரே முகமாக ஓடுகின்ற ஆற்றுநீரின் ஓட்டம் போலச் சொற்கள் முன் பின்னாக மாறாமல் நேராகவே பொருள்கொள்ளப்படுவது யாற்றுநீர்ப்பொருள்கோளாம்.

உ-ம் :—(பாட்டு. 5) "நீக்க மறமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும் நோக்கினவர்பெருமை நொய்தாகும்."

மேற்சொன்ன பொருள்கோள்கள் போல மாறிச்செல்ல வேண்டாமல், செய்யுளில் சொற்கள் நின்றவாறே பொருள்படுவது காண்க.

குறிப்பு.

நன்னெறிச்செய்யுள் ஒவ்வொன்றும் நேரிசைவெண்பாவாலாக்கபட்டது. *நேரிசைவெண்பாவெனினும் †தனிச்சொல்லாலிணைக்கப்பட்ட இரட்டைக்‡குறள்வெண்பாவெனினும் ஒக்கும். ஆனால், இந்நன்னெறியில் வரும் ஒவ்வொரு குறள்வெண்பாவும் ஒவ்வொரு திரண்டபொருளையுணர்த்துதலான் முன்னே கூறிய ஐவகைப்பொருள்கோள்களுக்குக் குறளடியாகவே உதாரணங்கள் கூறப்பட்டன.

இரண்டடிக்குமேற்பட்ட செய்யுட்களே அளைமறிபாப்பு, அடிமாற்றுப்பொருள்கோள்களுக்கு உதாரணங்களாகுமாகையால், அவைகள் ஈண்டுக் கூறப்படவில்லை; எஞ்சிநின்ற நிரனிறைப்பொருள்கோள்வகைக்கு இந்நன்னெறியில் ஒரு உதாரணமுமில்லை.

*நேரிசைவெண்பாவாவது நான்கு அடிகளாய், ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றையடி நாற்சீரடியாகவும் பெற்று, காய்ச்சீரும் மாச்சீர் விளச்சீர்களும் வெண்சீர்வெண்டளையும் இயற்சீர்வெண்டளையுங்கொண்டு, மற்றைச்சீருந் தளையும்பெறுமல், இரண்டாமடியின் இறுதிச்சீர் முதல் இரண்டு அடிகளின் எதுகைக்கு ஏற்ற தனிச்சொல்லாய்ப்பொருந்த, காசு பிறப்பு நாள் மலர் என்னும் வாய்பாடுகளுள் ஒன்றால் முடிந்து, ஒரு விகற்பத்தாலாயினும், இருவிகற்பத்தாலாயினும் வருவது.

ஒரு விகற்பமாவது—பல அடிகள் ஓர் எதுகையாய் வருவது.

இருவிகற்பமாவது—அவ்வடிகள் இருவகை எதுகையாய் அமைவது.

‡குறள்வெண்பாவாவது—வெண்பாவிற்குரிய இலக்கணங்களை அமையப்பெற்று, இரண்டு அடிகளால் முடிவது.

†தனிச்சொல்லாவது—நேரிசைவெண்பாவில், இரண்டாமடியின் இறுதிச்சீர் (அவ்வெண்பாவின்) முதலிரண்டடி அடிகளின் எதுகையையுடைய தனிச்சொல்லாய் நிற்பது.

சீர், தளை முதலியனவகளைப்பற்றி இந்நூல் பக்கம் 71 காண்க.

புராணகதைகள்.

நல்லோன்சிலையெறிந்தது.

சாக்கியநாயனார், காஞ்சிபுரத்திலிருந்த ஒரு சிவபக்தர். இவர் தமதுபகைவராகிய பௌத்தர்களுக்கஞ்சி, சிவலிங்கத்தைப்பூவினால் அருச்சனை செய்யாமல், கல்லே மலராகப்பாவித்து, அதை இலிங்கத்தின் மேலெறிந்துவந்தார். அதுவும் சிவபிரானுக்கு உவப்பாயிருந்தது இப்படியே நாயனார் நெடுநாளாகச் செய்துவந்து கடைசியாக ஒருநாள், அன்புமுதிர்ந்து ஆண்டவனை வழிபடும்போது. அப்பெருமான், இடபவாகனத்திலெழுந்தருளிக் காட்சியளித்து, நாயனாரைத் தன்திருவடிநீழலிற் சேர்த்தருளினார். இச்சாக்கியநாயனார், அறுபத்துமூன்றுநாயன்மார்களில் ஒருவராவர். (பாட்டு. 2.)

கருப்புவில்லோன் மலரம்பெய்தது.

முன்னொரு சமயம் கைலையங்கிரியில் சிவபிரான் யோகத்திலிருக்கும்போது, அந்நிலையைக்கெடுக்க, மன்மதன் அங்குவந்து, அவர்மீது மலரம்புகளை எய்தான். அப்புல்லிய அம்புகள், அத்துல்லியபிரானுக்கு யாதொரு துன்பமும் செய்யாவிடினும் யோகுசெய்வார்க்கிடையூறு செய்பவர் செல்லுங் கதி இதுவென்பது தெரிவிக்க, இறைவன் தன் நெற்றிக்கண்ணைத் திறந்தருளினார். அதினின்று பெருகிய அக்கினிச்சுவாலையால் மன்மதன், நீறாய்வெந்து உருவிழந்தான்; அதுபற்றியே அவனுக்கு ‘அநங்கன் அல்லது உருவிலி’ என்று பெயர். (பாட்டு. 2.)

பனிக்கடல் உண்ணப்பட்டது.

தேவேந்திரன் ஒருகாலத்தில், தன்னோடு மாறுபட்டு நின்ற விருத்திரன் முதலிய அசுரர்களோடு கடும்போர் புரிய, தேவர்கள் வல்லமைக்கு முன் நிற்கமாட்டாத அத்தைத்தியர்களனைவரும் பயந்தோடிக் கடலில் ஒளிந்துகொண்டார்கள். அப்படி மறைந்துவாழுமக்கொடியோரால், தேவர்கட்கும், முனிவர்கட்கும், மீளவுந்துன்பம் விளையக்கூடுமென்பதைத்தெரிந்த இந்திரன், அகத்தியமுனிவர்பாற் சென்று, அவ்வசுரரை எவ்வகையினாலாவது அழித்திடல்

வேண்டுமென்று பிரார்த்திக்க முனிக்கரசும், அவ்வேண்டு கோளுக்கிரங்கி. கடனீரனைத்தும் ஒரு உளுந்தளவாகச் செய்து, தன் உள்ளங்கையிலேற்றுப் பருகியருளினர். பருகவே, பதுங்கியிருந்த பலஅசுரர்கள் விருத்திராசுரனுடன் வெளிப்பட, அவர்களெல்லோரையும், எளிதாகவென்று கொன்ருன் அவ்வச்சிரப்படையோன். (பாட்டு. 7.)

கடவுள், சடையிற்கட்செவியணிந்தது.

தாருகவனத்துமுனிவர், ஒருகாலத்தில் சிவபிரானேடு எதிர்த்துத்தங்கள் தவமகிமையால் எழுந்த யானை, புலி, பாம்பு, மான் முதலியவற்றையேவிச் சிவனுரை அழித்து வரும்படி விடுத்தார்கள். உலகத்து உயிர்களெல்லாவற்றையும் அடக்கி ஆளுந்தன்மையுடைய ஆண்டவன், அம்முனிவரைச் செருக்கடக்க, அவர்கள் விடுத்த யானையையும், புலியையும் கொன்று அவற்றின் தோல்களை முறையே போர்வையாதவும், உடையாகவும் உடுத்து, எஞ்சின பாம்பு (கட்செவி) மான் முதலியவற்றைத் திருக்கணித்துத் தன்திருமேனியில் தரித்தருளினர். பாம்பு பரமனுடைய பாதத்திலும், கரத்திலும், சிரத்திலும் சிறந்து விளங்கியதாதலால், ஐயனுக்கு 'அரவாபரணன்' என்றொரு பேருமுளது (பா. 9)

மேருவரை வில்லாகவளைந்தது.

திரிபுராசுரர்கள் என்னும் மூன்று கொடிய அசுரர்கள் செருக்குற்றுத் தேவர்களைப் பலவாறு துன்பப்படுத்தி வந்தார்கள். அத்துன்பங்களுக்காற்ருத தேவர்கள் சிவபிரானிடம்அடைக்கலம்புக அவர், திருவுளங்கொண்டு, பூமியைத் தேரின் அடித்தட்டாகவும், ஆகாயத்தை அதன் மேல்தட்டாகவும், சூரியசந்திரர்களைத் தேர்க்கால்களாகவும், நான்கு வேதங்களைத் தேரிற்பூட்டுங் குதிரைகளாகவும், பிரமதேவனைச் தேர்ச்சாரதியாகவும், இடபத்தைக் கொடியாகவும், தேவர்களைச் சேனையாகவும், மகாமேருவை வில்லாகவும், விட்டுணுவை அம்பாகவுங் கொண்டு போருக்கெழுந்து அத்திரிபுராசுரர்களை அழித்துத்தேவர்களைக் காத்தளித்தார். (பாட்டு. 14.)

சுரநீர்மிகை வீந்தது.

பூர்வம் கபிலமுனிவர் சாபத்தினுற் செத்துச்சாம்ப ராய்க்கிடந்த சகரபுத்திரர் அறுபதினுயிரம் பேர்கள், நற்கதி யடையும்பொருட்டு அச்சந்ததியிற்றோன்றிய பகீரதன், ஆகாசகங்கையைக் கொண்டுவந்து அவர்களுடைய எலும்பு களை நனைப்பிக்கக்கருதி அக்கங்கையைக் குறித்துக் கடுந் தவம்புரிந்தான். அத்தவத்தின் நற்பயனுகப் பகீரதன் கங் கையை அழைத்து வருகையில், அவள் எவர்க்கும் அடங் காப் பெருவேகத்தோடு வந்தும், சிவனுடைய சடாமுடி யைக்கண்ட அளவில் அடங்கி ஒடுங்கி அதில் ஒளிந்தாள். அதுபற்றியே சங்கரனுக்குக் 'கங்காதரன்' என்று ஒரு பெயர் வழங்குவதுண்டு. (பாட்டு. 21.)

கடலில் கடுவுண்டான கதை,

ஒரு காலத்தில் துர்வாசர் சாபத்தினுல் தேவர்கள் வலிகுன்றியிருந்ததை அசுரர்கண்டு, தீமைபலவற்றை அத் தேவர்க்கு விளைத்து வந்தனர். அத்துன்பங்களுக்காற்ருத தேவேந்திரன் முதலிய தேவர்கள், முன்போலத்தாம் சீரும் சிறப்பும் நல்வாழ்வும் நன்குபெற ஏதுவாயிருக்கும் அமிர்த கலசம், முனிவர் சாபத்தினுற் கடலில் மூழ்கிக்கிடப்பதை யுணர்ந்து, அதை எவ்வகையாலும் மீண்டுமடைய வகை தேடினுர்கள். அதற்காக அத்தேவர்கள், அசுரர்களுடன் உறவாடி அவர்களுதவியையும் பெற்று, மந்தரகிரியை மத் தாகவும் வாசுகியென்னும் பாம்பைக் கயிருகவுமமைத்துப் பாற்கடலைக்கடைய, அதினின்று அமிர்தகலசமும், மற்றை இனிய பொருள்கள் வெளிப்பட்டதுடன், வாசுகி கக்கின கடு வும்(விஷமும்) அக்கடலிலிருந்து பொங்கிவந்தது. (பா. 22.)

விந்தியமலைதன் னுயர்வுதீர்ந்தது.

விந்தியமலை, ஒருகாலத்தில் தன்னைவிட உயர்ந்தது வேறென்றுமில்லையென்று செருக்குற்று, அகஸ்தியருக்கு வழிதடையாய் நிற்க, அதைத் அம்முனிவர் பாதாளத்தி லழுத்தி அம்மலையின் உயர்வைக்குறைத்தார் என்பது வரலாறு. (பாட்டு. 37.)

இலக்கத்தொகைமுறை.

இரண்டிலக்கத்தொகை.

அறம்.	கண்.	சுடர்.	நூல்.	பொருள்.
1. இல்லறம்	அகக்கண்	சூரியன்	உலகநூல்	கல்வி
2. துறவறம்	புறக்கண்	சந்திரன்	வீட்டுநூல்	செல்வம்

மூன்றிலக்கத்தொகை.

ஆசை	தொழில்.	பழம்.	தமிழ்.	குற்றம்.
1. மண்	ஆக்கல்	மா	இயல்	காமம்
2. பெண்	காத்தல்	பலா	இசை	வெகுளி
3. பொன்	அழித்தல்	வாழை	நாடகம்	மயக்கம்

நான்கிலக்கத்தொகை.

உரை.	[குணம்.	*குணம்.	பா.	தோற்றம்.
1. கருத்துரை	அறிவு	அச்சம்	வெண்பா	பை
2. பதவுரை	நிறை	நாணம்	ஆசிரியப்பா	முட்டை
3. பொழிப்புரை	ஓர்ப்பு	மடம்	கலிப்பா	நிலம்
4. அகலவுரை	கடைப்பிடி	பயிர்ப்பு	வஞ்சிப்பா	வியர்வை

ஐந்திலக்கத்தொகை.

இலக்கணம்.	பூதம்.	பொறி.	புலன்.	குரவர்.
1. எழுத்து	நிலம்	மெய்	ஊறு	அரசன்
2. சொல்	நீர்	வாய்	சுவை	உபாத்தியார்
3. பொருள்	தீ	கண்	ஒளி	தந்தை
4. யாப்பு	காற்று	மூக்கு	நாற்றம்	ஞானகுரு
5 அணி	வானம்	செவி	ஒலி	மூத்தோன்

ஆறிலக்கத்தொகை.

அரசியல்.	சுவை.	படை.	வினை.	உட்பகை.
1. அமைச்சு	இனிப்பு	தேர்	அறிவு	காமம்
2. அரண்	புளிப்பு	கரி	அறிவின்மை	குரோதம்
3. குடி	உவர்ப்பு	பரி	ஐயுறல்	உலோபம்
4 கூழ்	துவர்ப்பு	வாள்	கொளல்	மோகம்
5. நட்பு	கார்ப்பு	வில்	கொடை	மதம்
6. படை	கைப்பு	வேல்	ஏவல்	மாற்சரியம்

[ஆடூஉக்குணம் — *மகடூஉக்குணம்.

ஏழிலக்கத்தொகை.

பிறப்பு வகை.	புண்ணிய நதிகள்.	பெண் பருவம்.	வயது எல்லை	பெரியோர் இயல்பு.
1. தேவர்	கங்கை	பேதை	5—7	அறம்
2. மக்கள்	யமுனை	பெதும்பை	8—11	பொருள்
3. விலங்கு	சரசுவதி	மங்கை	12—13	இன்பம்
4. புள்	நருமதை	மடந்தை	14—19	அன்பு
5. ஊர்வன	காவேரி	அரிவை	20—25	புகழ்
6. நீர்வாழ்வன	குமரி	தெரிவை	26—31	மதிப்பு
7. தாவரம்	கோதாவரி	பேரிளம்பெண்	32—40	பொறுமை

எண்ணிலக்கத்தொகை.

அறியும் அளவை.	உடற் குறை.	அஷ்ட ஐசுவரியம்.	அஷ்ட குலகிரிகள்.	அஷ்ட போகம்.
1. காட்சி	குறள்	அரசு	கைலை	பெண்
2. அனுமானம்	கூன்	மக்கள்	இமயம்	ஆடை
3. ஆகமம்	ஊமை	சுற்றம்	மந்தரம்	அணிகலம்
4. அருத்தாபத்தி	குருடு	பொன்	விந்தம்	உண்டி
5. உபமானம்	செவிடு	மணி	நிடதம்	தாம்பூலம்
6. அபாவம்	முடவன்	நெல்	ஏமகூடம்	பரிமளம்
7. சம்பவம்	உறுப்பு மயக்கம்	வாகனம்	நீலகிரி	பாட்டு
8. ஐதிகம்	உறுப்பிலி	அடிமை	கந்தமாதனம்	பூவமளி

ஒருசொற்பல்பொருள்.

சொல்.	தென்மொழிப்பொருள்.	வடமொழிப்பொருள்.
அரவம்	பாம்பு	ஒலி
அளி	கொடை	வண்டு
கலை	கலையென்னேவல்	சந்திரன் பங்கு
கனி	பழம்	நிலவறை
சிலை	வில்	கருங்கல்
பூ	மலர்	பூமி
மதி	சந்திரன்	அறிவு
மா	மாமரம்	இலக்குமி
முனி	முனியென்னேவல்	தவசி
வாள்	ஒளி	வாட்படை

அஞ்சார்	- பயப்படார்	9
அடல்	- கொல்லுதல்	7
அதிர்	- ஒலிக்கின்ற	18
அரம்பை	- வாழை	17
அரவு	- பாம்பு	22
அரிது	- கஷ்டமானது	8
அல்கு	- சுருங்கிய	16
அவிர்	- விளங்குகின்ற	9
அழல்	- நெருப்பு	18
அழுங்கு	- வருந்து	19
அனைய	- ஒத்த	7
அன்றோ	- அல்லவா	24
ஆக்கும்	- உண்டாக்கும்	22
ஆயும்	- ஆராயும்	21
ஆர்	- நிறைந்த	25
ஆற்றல்	- செய்தல்	23
இடர்	- துன்பம்	16
இயம்பு	- சொல்	1
இயல்	- கூடிய	27
இருநீர்	- கடல்	18
இழிஞர்	- புலையர்	33
இழுது	- நெய்	20
இழை	- கன்னகை	12
இளம்	- சிறிய	38
இன்பு	- இன்பம்	19
ஈகை	- கொடை	17
ஈரம்	- குளிர்ந்த	14
உகவாமல்	- விரும்பாமல்	27
உய்க	- பிழைக்க	30
உரிய	- சொந்தமான	3
உளதோ	- உண்டோ	33
உள்ளார்	- கருதார்	10
உறுப்பு	- அவயவம்	20
உற்றுழி	- இருந்தவிடம்	39
எந்தை	- எம் தந்தை	17
எயிறு	- பல்	27
ஏல்	- ஏற்றுக்கொள்	9
ஏவல்	- ஏவலாள்	15
ஏறு	- ஆண்மிருகம்	7
ஏனையவர்	- மற்றவர்	2
ஒக்கும்	- ஒப்பாகும்	40
ஒண்	- பிரகாசமான	2
ஒண்	- அறிவுள்ள	26
ஒண்	- பளுவான	25
ஒன்பான்	- ஒன்பது	12
ஒன்று	- பொருந்திய	6
ஒன்று	- ஒருபொருள்	3
ஓங்கு	- உயர்	8
ஓது	- புகழப்பட்ட	6
கடிது	- விரைவாக	31
கடு	- நஞ்சு	22
கடு	மிகுந்த	39
கட்செவி	- பாம்பு	9
கதலி	- வாழை	28
கதிர்	- கிரணம்	18
கயவர்	- கீழ்மக்கள்	25
கருதாது	- எண்ணாமல்	10
கலுழும்	- புலம்பும்	20
கவரார்	- விரும்பார்	22
கழி	- உப்புக்கழி	16
கனி	- பழம்	24
கனிவு	- மனமிரக்கம்	28
காடி	- புளித்தநீர்	35
காதல்	- ஆசை	6
காப்பு	- காவல்	33
காமுறு	- ஆசைப்படு	35
கால்	- காற்று	19
காழ்	- வயிரம்பற்றிய	32
குண்டலம்	காதணி	3
குழல்	- கூந்தல்	1

கூற்றம்	- யமன்	30
கேண்மை	நட்பு	38
கைம்மாறு	பிரதியுபகாரம்	27
கோதை	- மாலை	14
கோலி	- கட்டி	30
சடை	- பின்னல் மயிர்	9
சார்தல்	- அடைதல்	14
சிலை	- கல்	2
சினம்	- கோபம்	8
சீதம்	- குளிர்ச்சி	12
சுரநீர்	- கங்கை	21
சுவை	- உருசி	1
சூறாவளி	- சுழல்காற்று	11
செருக்கு	- இறுமாப்பு	14
சேக்கை	- படுக்கை	24
தக்கார்	- யோக்கியர்	36
தட	- அகன்ற	8
தண்(மை)	குளிர்ச்சியான	18
தளிர்	- துளிர்	19
தாழ்	- திறவுகோல்	32
திகழ்ச்சி	- பிறழ்ச்சி	23
திங்கள்	- சந்திரன்	10
திட்பம்	- உறுதி	23
திண்மை	- உறுதி	5
திருந்தும்	- விளங்கும்	19
தீம்	- இனிய	38
துப்பு	- வலிமை	11
துயரம்	- வருத்தம்	31
துன்று	- கிடைத்த	1
தென்றல்	- (தென்) காற்று	19
தேமா	- மாமரம்	19
தேர்	- ஆராய்ந்தறி	32
தொடி	- வளையல்	17
தோற்றம்	- பிறப்பு	14
நகைமுகம்	புன்சிரிப்பு	19
நடுக்கம்	- மெய்விதிர்ப்பு	29
நட்பு	- சினேகம்	39
நண்ணார்	- காப்பாற்றார்	25
நல்கார்	- கொடுக்கார்	28
நல்கூர்ந்தான்	- தரித்திரன்	17
நல்லோன்	சாக்கியநாயனார்	2
நனி	- மிகவும்	28
நிகழ்வு	- சம்பவம்	39
நுதல்	- நெற்றி	34
நூல்	- சாஸ்திரம்	15
நெகிழ்ச்சி	- தளர்ச்சி	23
நொய்து	- அற்பம்	25
நோக்கும்	- பார்க்கும்	6
நோன்பு	- தவம்	23
பகர்ச்சி	- பேசுதல்	23
படர்	- விரிந்த	9
பயன்	- பிரயோசனம்	32
பயில	- பழக	23
பரம்	- மேலானது	29
பருமணி	- மாணிக்கம்	22
பலி	- பூசை	9
பழி	- உலகநிந்தை	34
பனுவல்	- நூல்	32
பன்னும்	- சொல்லும்	32
பால்	- இடம்	25
பால்	- பசும்பால்	3
பிணி	- நோய்	20
புகல்வது	- சொல்லுவது	24
புகழவோ	- போற்றவோ	1
புயல்	- மேகம்	4
புலவர்	- அறிவுடையோர்	11
புலன்	தேர்ந்த அறிவு	11
புல்லியர்	- அற்பர்	11
புல்லினும்	சேர்ந்தாலும்	5
புள்ளரசு	- கருடன்	9
பூணும்	- அணியும்	40
பூ(ம்)	- அழகிய	1
பூரிக்கும்	- உடல் பருக்கும்	23

பேதாய்	- பெண்ணே	23
பேதை	- மூடன்	37
பொருந்து	தங்கு	12
பொலி	- அழகால் விளங்குகின்ற	1
பொழில்	- சோலை	24
பொள்ளல்	பொத்தல்	12
மடவரால்	- பெண்ணே	26
மடவார்	- பெண்கள்	23
மணம்	- வாசனை	39
மண்டு	- நெருங்கிய	20
மதி	- சந்திரன்	6
மதியார்	- உயர்வாக எண்ணார்	35
மருவில்	- சேர்ந்தால்	9
மனையாள்	- மனைவி	6
மன்னும்	- நிலைபெற்ற	32
மாசு	- குற்றம்	2
மாதே	- பெண்ணே	13
மாறு	- வேறுபாடு	6
மிகை	- பெருக்கம்	21
மீக்கொள்	மேலிடம்	22
முகந்து	- மொண்டு	7
முகமன்	- உபசார வார்த்தை	1
முதிர்	- நிரம்பிய	27
முது(மை)	பழமை	15
முளி	- உலர்ந்த	36
முளைக்கும்	விளையும்	27
முனிக்கரசு	அகஸ்தியர்	7
முனி	- கோபி	28
மூதறிஞர்	- பேரறிஞர்	28
மெய்	- உடம்பு	31
மெய்	- உண்மை	11
மெலியோர்	- வலியற்றவர்	9
மென்று	- பல்லாலதுக்கி	27
மைந்தர்	- குமாரர்	17
வந்தன்று	- வந்தது	14
வரை	- மலை	14
வலி	- உறுதி	32
வாயில்	- வழி	12
வாய்	- இடம்	24
விண்	- ஆகாயம்	26
வியப்பு	- ஆச்சரியம்	12
வியல்	- அகன்ற	18
விரவலர்	- பகைவர்	9
விருப்பு	- ஆசை	2
விளம்பு	- சொல்	8
விளையா	- உண்டாக	11
விள்ளா	- நீங்காத	33
விழி	- கண்	15
விழுமியோர்	- பெரியோர்	10
வீதல்	- அழிதல்	12
வீயும்	- அழியும்	21
வீரம்	- சௌரியம்	31
வெற்றி	- ஜயம்	35
வேண்டும்	ஒத்த (வேல்)	35
வேண்டும்	விரும்பும் (பால்)	35
வேந்தர்	- அரசர்	40
வேம்பு	- வேப்பம்பழம்	24

குறிப்பு:—ஒரு சொல்லுக்குப்பலபொருளுளவாயினும், ஈண்டுப் பாடத்துக்கேற்ற ஒரே பொருளுளது; அப்பொருளுக் கெதிரே இருக்கும் எண், மூல பாடத்திலுள்ள செய்யுளைக் குறிக்கும்.

ணகர னகர பேதங்கள்.

அணை	- செய்கரை	அனை	- ஓர்மீன்
அணைத்தும்	கட்டித்தழுவியும்	அனைத்தும்	எல்லாம்
உண்	- தின்	உன்	- நினை
கணம்	- கூட்டம்	கனம்	- பெருமை
கணி	- கணிப்போன்	கனி	- பழம்
கணை	- அம்பு	கனை	- ஒலி
கண்	- விழி	கன்	- கல்
காண்	- பார்	கான்	- காடு
தண்	- குளிர்ச்சியான	தன்	- ஓர்சாரியை
திண்	- பலம்	தின்	- புசி
நண்ணுதல்	அணுகல்	நன்னுதல்	- பெண்
பணி	- தொழில்	பனி	- குளிர்
பண்	- பாட்டு	பன்	- சொல்லு
புணை	- தெப்பம்	புனை	- அலங்கரிப்பு
புண்	- இரணம்	புன்	- அற்பமான
மணம்	- வாசனை	மனம்	- உள்ளம்
மண்	- பூமி	மன்	- நிலைபெற்ற
மாண்	- மாட்சிமை	மான்	- ஒருமிருகம்
வண்ணம்	- அழகு	வன்னம்	- எழுத்து

ரகர றகர பேதங்கள்.

அரம்	- ஓராயுதம்	அறம்	- தருமம்
அரி	- அறு	அறி	- தெரி
அரும்	- கஷ்டமான	அறும்	- நீங்கும்
அரை	- பாதி (½)	அறை	- சொல்லு
இரப்பார்	- யாசிப்பார்	இறப்பார்	- சாவார்
இரை	- ஒலி	இறை	- நீர்ப்பாய்ச்சு
உருப்பு	- அதட்டு	உறுப்பு	- அவயவம்
உரும்	- இடி	உறும்	- வந்தடையும்
உரை	- சொல்லு	உறை	- வாசஞ்செய்
ஊர	- நகர	ஊற	- நனைய
எரி	- நெருப்பு	எறி	- வீசு
ஒரு	- ஒன்று	ஒறு	- தண்டி
கரந்து	- மறைந்து	கறந்து	- பால் பீச்சி
கரை	- நீர் நிலையணை	கறை	- கறுப்பு
குருகு	- நீர்ப்பறவை	குறுகு	- கிட்டு

சொல்.	பொருள்.	சொல்.	பொருள்.
சிரை	பயிர்கழி	சிறை	இறகு
சேரி	சேரிகூடல்	செறி	நிறைந்த
தரி	தாங்கு	தறி	வெட்டு
துருப்பு	திரணம்	துறப்பு	நெருங்கு
தெரி	அறி	தெறி	சிதறடி
நிரை	ஒழுங்கு	நிறை	நிரப்பிய
நெரி	படிப்பு	நெறி	வழி
பிரப்பு	பெருண்டி	பிறப்பு	உற்பத்தி
பிரை	அரைப்பாங்கு	பிறை	இளஞ்சந்திரன்
பெரும்	பெரிய	பெறும்	அடையும்
பேரு	சூரியன்	பேறு	செல்வம்
பரு	பருசசொரூர்த	பறு	தவறு
பரை	ஒரு மிருகம்	பறை	பறைதல்
வரை	மலை	வறை	துவட்டற்கறி

லகர ளகர பேதங்கள்.

சொல்.	பொருள்.	சொல்.	பொருள்.
அலவு	அலைதல்	அளவு	வரையறை
அலி	பேடி	அளி	கொடு
உல்லம்	ஓர்மீன்	உள்ளம்	நெஞ்சம்
எல்	ஒளி	எள்	இகழ்
ஒலி	சத்தம்	ஒளி	வெளிச்சம்
கலை	சந்திரன்பங்கு	களை	இளைப்பு
குலம்	கூப்சம்	குளம்	ஒரு நீர்நிலை
கொல்	ஒருவினை	கொள்	பெறு
கோலி	(அணை) கட்டி	கோளி	ஆலமரம்
கோல்	தடி	கோள்	புறங்கூறல்
தலை	தலைமை	தளை	கட்டு
தொலை	அழி	தொளை	துவாரம்
நல்	நல்ல	நள்	சிநேகி
நால்	நான்கு; தொங்கு	நாள்	தினம்
புலி	வேங்கை	புளி	புளியமரம்
புல்	புல்லு	புள்	பறவை
பொலி	விளங்கும்	பொளி	தொளை
வலி	பலம்	வளி	காற்று

வலை	கண்ணி	வளை	கைபணி
வால்	தோகை	வாள்	ஒளி ; ஒருபடை
விலக்கு	தவிர்ப்பு	விளக்கு	தீபம்
விலை	கிரயம்	விளை	உண்டாதல்
வில்லார்	வில்லிற்றொழுத்த	விள்ளார்	நீங்கார்
வெல்லம்	கருப்பின்கட்டி	வெள்ளம்	நீர்ப்பெருக்கு
வேல்	ஆயுதம்	வேள்	மன்மதன்

எதிர்மொழிகள்.

ஒருதலை.	மறுதலை.	ஒருதலை	மறுதலை
அறம்	மறம்	நிறை	குறை
அரும்	உறும்	செழுமை	குறுமை
அன்பு	வன்பு	பழமை	புதுமை
இன்சொல்	வன்சொல்	பிறப்பு	இறப்பு
இன்பம்	துன்பம்	புகழ்	இகழ்
கயவர்	நயவர்	பெருக்கம்	சுருக்கம்
கனிவு	முனிவு	பேதை	மேதை
கொடுமை	செம்மை	பொலி	நலி
தடுத்தல்	விடுத்தல்	போற்று	தூற்று
திட்பம்	நுட்பம்	மருவு	ஒருவு
திருந்து	வருந்து	மலர்ந்த	புலர்ந்த
தீங்கனி	தீக்கனி	மூதறிவு	புல்லறிவு
தென்றல்	வாடை	விருப்பு	வெறுப்பு
நன்னெறி	புன்னெறி	வெற்றி	தோல்வி

பெண்ணைக்குறிக்கும் அன்மொழித்தொகைக்காரணப்பெயர்கள்.

முதல் வேற்றுமை.	பொருள்.	எட்டாம் வேற்றுமை.
ஈர்ங்கோதை	குளிர்ச்சியான மாலையைபணிந்தவள்	ஈர்ங்கோதாய்!
திருந்திழை	ஒழுங்கான கல்விழைத்த நகைகளை ,,	திருந்திழாய்!
தெரியிழை	தெரிந்தெடுத்த ,, ,,	தெரியிழாய்!
நன்னுதல்	அழகிய நெற்றியையுடையவள்	நன்னுதால்!
நேரிழை	தகுதியான இரத்தினாபரணமணிந்தவ(ள்	நேரிழாய்!
பிறைநுதல்	பாதிமதிபோன்ற நெற்றியுடையாள்	பிறைநுதால்!
பைந்தொடி	பசும்பொன்னாற்செய்தவளையணிந்தவ(ள்	பைந்தொடீ!
பொற்றொடி	பொன்னாற் ,,	பொற்றொடீ!
மடவரால்	மடமைப்பருவம் வருதலையுடையவள்	மடவரால்!

அரும்பத விளக்கம்

இலக்கணப்போலி—இலக்கண மில்லையாயினும், இலக்கண முடையது போலத் தொன்றுதொட்டு வழங்கி வருவது; இது பெரும்பாலும் (i) சொன்னிலை மாறியும் சிறுபான்மை (ii) பதப்புணர்ச்சி வகையால் தோன்றும் உடம்படுமெய்,வேறு மெய்யெழுத்தாகத்திரிந்தும் வரும்.

உ-ம்:—இலக்கணமுடையது	இலக்கணப்போலி
(i) கண்மீ	மீகண்
தெருநடு	நடுத்தெரு
நகர்ப்புறம்	புறநகர்
(ii) கோ + இல்-கோவில்	கோயில்

இலக்கணை—ஒரு சொல்லுக்குரிய இயற்பொருளை யொழுத்து அதற்கினமான வேறு பொருளைத் தருவது. இலக்கணை யெனினும் ஆகுபெயர் எனினும் ஒக்கும்.

உ-ம்:—வாளரக்கன்-வாளை யேந்திய அரக்கன் என்று பொருள் ; வாளைப்போலக் கொடிய அரக்கன் எனப் பொருள்படுமிடத்து வாள் கொடுமைக்கு இலக்கணை.

இன்னிசையளபெடையாவது—பாட்டில் ஓசைகுன்றுவிடத்தும், இனியவோசையைத்தரும்பொருட்டுக் குற்றெழுத்து நெட்டெழுத்தாய்த்திரிந்து அந்நெடிலுக்கினமான குறிலையும் பெற்று மூன்று மாத்திரையளவாய் நீண்டொலிப்பது.

உ-ம்:—(பாட்டு 10.) " தங்குறை......பிறர்க்குறூஉம் "
'பிறர்க்குறும்' என்பதில் 'று' இசை யின்பம் நோக்கி 'றூஉ' எனவாயிற்று.

உவமை—(i) உவமா என்ற வடசொற்றிரிபு ; ஒரு பொருளுக்கு ஒப்புமை விளங்குவது:பொருளுக்கு ஆகுபெயர். உவமையெனினும் உபமானமெனினும் ஒக்கும். இவ்வுமைச் சொற்கள், போல-நேர-ஒப்ப-முதலிய உவமவுருபுகளில் ஒன்றைப் பெற்று, வினை-பயன்-மெய்-உரு என்பனவற்றைப் பற்றி வரும்.

உ-ம்:—குருவிபோலக் கூப்பிட்டான் — வினையுவமை
கற்பகம் போன்ற கையான் — பயனுவமை
உரலொத்த காலையுடைய யானை — மெய்யுவமை
பவளம் போலும் வாய் — உருவுவமை

(ii) உவமிக்கப்பட்ட பொருள் உபமேயம்; உபமேய மெனினும் பொருளெனினும் ஒக்கும்.

குறிப்பு—உபமானம் உயர்ந்து உபமேயந் தாழ்ந்து வருவதே பொருளைச் சிறப்பிக்குமென்பது அணிநூலார் கொள்கை.

கடவுள்—செய்யுள்-விக்குள்-என்பவற்றைப் போல 'உள்' விகுதிபெற்ற தொழிற்பெயர்; கடத்தல் என்பது பொருள்; தொழிலாகுபெயராய் இவ்வுலகப்பற்றைக் கடந்து நிற்கும் ஒப்பற்ற பொருளுக்குக் காரணக்குறி; இனி இயல்பாகவே பாசங்களையெல்லாம் கடந்தவர் எனப்பொருள் கொண்டால், 'உள்' கருத்தாப்பொருள் விகுதியாம்.

கட்செவி—கண்ணிலே காதையுடையதென ஏழாம் வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயராய்ப் பாம்பைக் குறிக்கும்.

கண் + செவி = கட்செவி: வேற்றுமைப்புணர்ச்சியில், மொழியீற்று ணகரத்திற்கு முன் (கசப) வல்லினம் வரின், பெரும்பாலும் ணகரம் டகரமாகத்திரியும்; கட்கடை, மட்பாணை முதலியவை. வேறு உதாரணங்களாம்.

கருப்புவில்லோன்—மன்மதன்; அவனுக்கு வில் கரும்பும், அம்பு மலருமாம். தாமரை, அசோகம், மல்லிகை, அல்லி, மாம்பூ, என ஐவகை மலராகிய அம்புகளையுடைமையான், மன்மதனுக்குப் 'பஞ்சபாணன்' என்றும் ஒரு பெயர். அவன் அம்பெய்தலாவது: ஆடவர் பெண்டிர்கட்கு அன்பை விளைவித்தல்; சித்தசன் என்னும் வடசொல்லும் இதே கருத்தையுடையது.

கரும்பு + வில் = கருப்புவில். சிலமென்றொடர்க்குற்றியலுகர மொழிகள், வருமொழிகளோடு புணரும்பொழுது, வன்றொடர்களாக மாறும்:—குரக்குமனம், கழச்சுக்கோல், எட்குக்குட்டி, வேத்தவை, கற்று முதலியன வேறு உதாரணங்களாம்.

சாதியொருமையாவது— ஒருசொல் ஒருமையீறுதோன்ற நின்றும், தோன்றாதுநின்றும், பின் ஒருமை பன்மை வினையீறுகவந்து முடிக்குஞ்சொல் உளதாகவும் இல தாகவும் தானே பன்மைப்பொருளுணர்த்துவது.

உ-ம்:— 'நிலத்தில் வாழுமுயிர்களில் யானை மிகப் பெரியது'-ஒவ்வொரு யானை மிகப்பெரிதென்றும், யானைகள் மிகப் பெரியனவென்றும் பொருள்படும்.

சுழல்கால்—'கால்' நான்கிலொரு பகுதியைக் குறிக்கும் எண்ணளவுப்பெயர், உடம்பில் அவ்வளவினதான பாதத்துக்காயதன் தொழிலாகிய நடையைக் குறிக்கும்; ஈண்டு அந்நடையையுடைய காற்றுக்குப் பொருளாத லின், இருமடியாகுபெயராம்.

சொல்லிசையளபெடையாவது — ஒருசொல் மற்றொருசொல் லின் இசையை நிறைத்தற்பொருட்டு அளபெடுப்பது.

உ-ம்:— (பாட்டு 19.) "நல்லோர்.........இன்புறீஇ"
'இனபுறறு' என்பது 'இன்புறீஇ' என வளபெடுக்க விகாரப்பட்டது.

திங்கள்கறையிருள்—என்பதுசந்திரனுள்தோன்றும்களங்கம்; இதனை 'மான்' என்றும் 'முயல்' என்றும் கூறுவது கவிமரபு. இதுபற்றிச் சந்திரனுக்குக் களங்கன், மானேந்தி,முயற்கூடு என வேறுபெயர்களும் வழங்கும். சந்திரனுக்கு முகமும், களங்கத்திற்குத் திலகமும் உவமேயமாம்.

நல்கூர்ந்தான்—(நல்கூர், பகுதி) நல்கு-ஊர் என்ற இரண்டு சொற்கள் ஒருசொல்தன்மைப்பட்டுக் கொடுப்பதைப் பெற்றுக்கொள்ளச் செல்லுதற்குக் காரணமான வறுமைக்குக் காரணக்குறி; அவ்வறுமையை யடைந்தோன் நல்கூர்ந்தான்; நல்குரவு - தொழிற்பெயர்; 'உ' அல்லது 'வு, புடைபெயர்ச்சிப்பொருள்விகுதி, அ-சாரியை.

புள்ளரசு—கருடன்: இது பாம்பிற்குப் பகை; கருடன் நிழல் பட்ட பாம்பு இறக்குமாம். பூவரசு, பெண்ணரசு, மலையரசு என்பவற்றைப்போலப் புள்ளரசு நான்காம் வேற்றுமைத்தொகை; 'புள்ளுக்கரசு' என விரிந்து தகுதிப்பொருளை யுணர்த்தும்.

பூங்குழலாய் !— (i) 'குழல்' என்னுஞ் சினையடியாகப் பிறந்த 'ஆள்' விகுதி பெற்ற உயர்திணைப் பெண்பாற் படர்க்கை ஈறு திரிந்த விளிப்பெயர்; இது 'இ' விகுதி பெற்றுக் 'குழலீ' எனவும் 'பூங்குழால்' என அன்மொழித்தொகைவிளிப்பெயராகவும் வரும்.

(ii) குழல், ஐம்பாற்பகுப்பிலொன்று.

ஐம்பாலாவன :—

(1)	முடி	மயிரை-உச்சியிற்சேர்த்து முடிப்பது
(2)	கொண்டை	பக்கத்திற் சேர்த்து முடிப்பது
(3)	சுருள்	பின்னே சேர்த்துச் சொருகுவது
(4)	குழல்	சுருட்டி முடிப்பது
(5)	பனிச்சை	பின்னிவேது

பெயரிடைநிலை—வினையாலணையும்பெயரல்லாத பெயர்ப்பகு பதத்தைப் பகுதி விகுதிகளாகப் பிரித்து எஞ்சி நடுவே நிற்குமெய்யெழுத்தைப்' பெயரிடைநிலை' எனக்கொள்ள வேண்டும் ; இப்பெயரிடைநிலை (வினையாலணையும்பெயர் இடைநிலைபோலக்) காலங்காட்டாது.

உ-ம்:—வலைச்சி. வலை-ச்-ச்-இ	ச்-பெயரிடைநிலை	
கலைஞன். கலை-ஞ்-அன்	ஞ்	,,
வண்ணாத்தி. வண்-ண்-ஆ-த்-த்-இ	த்	,,
கொழுநன். கொழு-ந்-அன்	ந்	,,
ஓதுவான். ஓது-வ்-ஆன்	வ்	,,

பொய்ப்புலன்கள்—ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை எனப் புலன்களைந்தாம் ; இவை முறையே கொள்ளுதற்கேற்ற இடங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஐம் பொறிகளெனப்படும் ; இவை ஒரு பொருளின் உண்மையையுணரவொட்டாது, ஒருவனுடைய அறிவைத் தடுக்கும் கருவிகளாயிருந்து கடைசியில் அழியுந் தன்மையுடையனவாதலால், பொய்ப்புலன்களென்றார் ஆசிரியர் ; பொறிகள் செய்யுங் காரியத்தைப் புலன் கண்மேலேற்றிக் கூறியது உபசாரவழக்காம்.

மங்கலவழக்கு—மங்கலமில்லாததையொழித்து மங்கலமாகக் கூறுவது.

உ-ம்:—அமங்கலமொழி	மங்கலமொழி
ஓலை	திருமுகம்
காராடு	வெள்ளாடு
சாதல்	துஞ்சுதல்
பொய் (உடல்)	மெய்
வயிற்றெரிச்சல்	பசி (பசுமை =குளிர்ச்சி)

மரூஉமொழிகள்—ஒரு விதியின்றி விகாரப்பட்டு வழங்கி வருவனவாயினும், இடை நடுவேயிருந்த ஆன்றோரால் ஆட்சி பெற்றவை.

தனிமொழி	மரூஉ	தனிமொழி	மரூஉ
உ-ம்:—குளவாம்பல்	குளாம்பல்	அ	அந்த
சோழநாடு	சோணாடு	பகுதி	பாதி
வடக்கிலுள்ளது	வடாது	யானை	ஆனை

முனிக்கரசு—முனிவர்களுக்குத் தலைமையான அகஸ்தியர்: இவர் கட்டை விரலளவு உயரமுள்ளவர்; கடலைக் காட்டிலும் அளவிறந்த அறிவுடையராதலின், மிகப் பெரிய கடலும் இவரால் உண்ணப்பட்டது போலும்; தமிழைத் தென்திசையில் தழைத்தோங்கச் செய்தன ராதலின், இவர்க்குத் 'தமிழ்மாமுனி'யென ஒரு பெய ருமுளது. முனி-சாதியொருமை, அரசு-தலைமை; இப்பொருளாதலை நாவுக்கரசு, மங்கையர்க்கரசு முதலிய வற்றிலுங் காண்க.

மெய்ப்புலவர்—உண்மை நூல்களைக் கற்றுத் தேர்ந்த அறி வுடையோர். உண்மைநூல் எற்றைக்கும் உளதாகிய ஒரு உண்மைப்பொருளை (இறைவனை) யடைவதற்குரிய வழிகளையுணர்த்தும் ஞானநூல்.

புலம்-அறிவு; அதனையுடையவர் புலவர். புல(ம்) + வ் + அர்; இதில் 'வ்' உடம்படுமெய்; பெயரிடைநிலையன்று.

நன்னெறிச் செய்யுட்களில் பெரும்பாலும் அமைந்துள்ள அணிகள்

1. எடுத்துக்காட்டுவமையணியாவது — உபமானத்தையும் உபமேயத்தையும் தனியே நிறுத்தி அவைகட்கு இடையில் உவமவுருபு கோடாமற் கூறுவது.

உ-ம்:-பாட்டு-5. "நெல்லினுமி போம்" (உபமானம்)
"நீக்கமறுமிருவர் நொய்தாகும்." (உபமேயம்)

2. சொற்பின்வருநிலையணியாவது—வந்த சொல்லே மீண்டும் வேறு பொருள்பட வருவது.

உ-ம்:-பாட்டு-35. "வேல்வேண்டும் வாள்விழியாய்" (போன்ற)
"பால் வேண்டும் வாழைப்பழம்" (விரும்பும்)

3. சொற்பொருட்பின்வருநிலையணிபாவது—ஒருசொல் வந்த பொருளிலேயே மீண்டும் வருவது.

உ-ம்:-பாட்டு 2. "மெய் சென்று தாக்கும்." (போய்)
"கை சென்று தாங்கும்." (போய்)

4. பிறிதினவிற்சியணியாவது — ஒன்றைஇயல்பாகக்கூறுமல் வேறு வகையாற் கூறுவது.

உ-ம்:-பாட்டு 2. "ஒண்கருப்புவில்லோன்" (மன்மதன்)

5. வேற்றுப்பொருள்வைப்பணியாவது—பொதுப்பொருளாற் சிறப்புப்பொருளையும், சிறப்புப்பொருளாற் பொதுப் பொருளையும் நிறுத்துதல்.

உ-ம்:—பாட்டு 21. "எழுத்தறியார்...இலேயாம்." பொதுப்பொருள்
"எழுத்தறிவார்...... மிகை." சிறப்புப்பொருள்

குறிப்பு.

அணியாவது—செய்யுள் அழகுபெறப் புலவர்களாற் பாடப் பெற்று விளங்குவது; அணியிலக்கணத்துக்கு ஆகுபெயர். அது சொல்லணி, பொருளணி என இருவகைப்படும்; சொற்பற்றி நிகழ்வன சொல்லணிகளென்றும் பொருள் பற்றி நிகழ்வன பொருளணிகளென்றும் பெயர். அவற்றுள் சொல்லணிகள் பெரும்பாலும் பொருளணிகளிலடங்குமாதலின், அவைகளைக் கூறாது பொருளணிகளிற் சிலவற்றை மட்டும் ஈண்டு எடுத்துக் காட்டினம்.

நன்னெறிச் செய்யுட்களின் யாப்பிலக்கணம்

யாப்பின் உறுப்புக்களும் அவற்றின் வகைகளும்

எழுத்து 2	அசை 2	சீர் 4	தளை 7	அடி 5	தொடை 5
முதல்	நேர்	ஓரசை	நேரொன்றாசிரியத்தளை	குறளடி	எதுகை
சார்பு	நிரை	ஈரசை	நிரையொன்றாசிரியத் ,,	சிந்தடி	மோனை
		மூவசை	வெண்சீர்வெண்டளை	அளவடி	முரண்
		நாலசை	இயற்சீர்வெண்டளை	நெடிலடி	அளபு
			ஒன்றியவஞ்சித்தளை	கழிநெடி ,,	இயைபு
			ஒன்றாவஞ்சித்தளை		
			கலித்தளை		

எழுத்தாவன—முதலெழுத்தாகிய உயிரும் மெய்யும், சார்பெழுத்தாகிய உயிர்மெய், ஆய்த முதலிய பத்துவகைகளுமாக மூந்நூற்றறுபத்தொன்பது (369) எழுத்துக்கள்.

அசையாவது—எழுத்தினுலாக்கப்பட்டுச் சீருக்கு உறுப்பாய் வருவது.

அசை	உதாரணம்		
1. நேரசையாவது ஒருகுறிலாவது ஒருநெடிலாவது தனித்தாயினும் ஒற்றடுத்தாயினும் வருவது. [குறில் தனித்து அசைச்சீரில் வாராது.]	அசைச்சீர் அல்லது ஓரசைச்சீர்	இயற்சீர் அல்லது ஈரசைச்சீர்	வெண்சீர் அல்லது மூவசைச்சீர்
	மே கண் காண் முதலியன	பே சு மா தே நிற் றல் கண் டு தாக் கும் வில் லார் முதலியன	தீ தற் றோர் பைங் தொ டீஇ மெய் சென் று வண் ணஞ் [செய் முதலியன

2. நிரையசையாவது குறிலிணையாவது குறில் நெடிலாவது தனித்தும் ஒற்றடுத்தும் வருவது. [நெடில் முதலெழுத்தாயும் குறில் இரண்டாவதெழுத்தாயும் வருவது நிரையசையன்று.]	கனி பழம் மிகை நுதால் முதலியன	கதிரொளி இழியினும் மடவரால் மறுப்பரோ முதலியன	ஈண்டு உதாரணங்கள் நன்னெறி வெண்பாவிலிருந்து கூறப்பட்டனவாதலின், கனிச்சீர்கள் வெண்பாவில் வாரா.

சீராவது—அசைகள் பெரும்பான்மை இரண்டுமுதல் நான்குவரையில் தொடர்ந்து வருவது.

சீர்	அசை	உதாரண வாய்பாடு
1. ஓரசைச்சீராவது — நேரசையாயினும் நிரையசையாயினும் தனித்து நின்று சீராய் வருவது. [இது அசைச்சீர் எனவும் வழங்கும்.]	நேர். நிரை.	நாள் - நள் - நா. மலர் - சில. மலே - படாம்.
2. ஈரசைச்சீராவது — நேர் நேர் - நிரை நேர், நிரை நிரை-நேர் நிரை என இரண்டு அசை கூடிவரும் நான்குமாம். [ஈரசைச் சீரெனினும் இயற்சீர், அகவற்சீர், ஆசிரியவுரிச்சீர் எனினும் ஒக்கும்.]	மாச்சீர். நேர்நேர். நிரைநேர். விளச்சீர். நிரைநிரை. நேர்நிரை.	 தேமா. (காசு) புளிமா.(பிறப்பு) கருவிள. கூவிள.
3. மூவசைச்சீராவது — ஈரசைச்சீர் நான்கின் இறுதியில், நேரசையும் நிரையசையும் தனித்தனி கூடி வருதலாலாகிய எட்டு வகையாம். அவற்றில் வெண்பாவிற்கு வேண்டிய முதல் நான்கு வகைகளைமட்டும்ஈண்டுக்கூறப்பட்டன.	காய்ச்சீர். நேர்நேர்நேர். நிரைநேர்நேர். நிரைநிரைநேர். நேர்நிரைநேர்.	 தேமாங்காய். புளிமாங்காய். கருவிளங்காய். கூவிளங்காய்.
4. நாலசைச்சீர் வெண்பாவில் வாராது.		

தளையாவது—நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ் சீரின் முதலசை ஒன்றியாயினும் ஒன்றுமலாயினும் கூடி நிற்பது. ஒன்றுதலாவது-நேர்முன் நேரும் நிரைமுன் நிரையும் வருவது. ஒன்றுமையாவது-நேர்முன் நிரையும் நிரைமுன் நேரும் வருவது.

* தளை	உதாரணம்
1. வெண்சீர் வெண்டளையாவது காய்முன் நேர் வருவது	காய்முன் நேர் வண் ணஞ் செய் (வாள்) தேமாங்காய் பெரி யோர் முற் (றன்னே) புளிமாங்காய் அறி ஞரைத் தாம் (மற்று) கருவிளங்காய் ஒண் புல வர் (கல்வி) கூவிளங்காய்
2. இயற்சீர் வெண்டளையாவது:— (i) மாமுன்நிரை வருவதும்	மாமுன் நிரை நல் கார் (கயவர்) தேமா புக லும் (பனி) புளிமா
(ii) விளமுன்நேர் வருவதுமாம்.	விளமுன் நேர் மட வரால் (கண்) கருவிள நே ரிழாய் (மெய்) கூவிள

* ஈண்டு வெண்பாவிற்குரிய இரண்டு தளைகளைப் பற்றியே கூறப்பட்டன.

அடியாவது—தளைகள் ஒன்றும் பலவும் அடுத்துவருவது.

குறளடி	இருசீரால் வருவது.
சிந்தடி	முச்சீரால் ,,
அளவடி (நேரடி)	நாற்சீரால் ,,
நெடிலடி	ஐஞ்சீரால் ,,
கழிநெடிலடி	ஆறு முதலிய சீர்களால் ,,

தொடையாவது—பல அடிகளிலாயினும், பல சீர்களிலாயினும் எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது.

எதுகைத்தொடையாவது—அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டு முதலிய எழுத்துக்கள் ஒன்றி வரத் தொடுப்பது.

உ-ம் :—(1) " எ(ன்று) முகமன்........... செ(ன்று) பொருள் "	இரண்டெழுத்துக்கள் ஒன்றி வந்தன.
(2) " வி(லையளவு)............... க(லையளவு) "	பல எழுத்துக்கள் ஒன்றி வந்தன.

மோனைத்தொடையாவது—பல அடிகளிலாவது, ஓரடியின் பல சீர்களிலாவது முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

உ-ம் :—" கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல்."

178531

முரண்தொடையாவது—சொல்லாலும் பொருளாலும் மறுதலைப்படத் தொடுப்பது.

உ-ம்:—பா. 13. " பெருக்கம் ஒடு சுருக்கம் " சொல்லான்முரண்.
„ 18. " பொங்காது...பொங்கும் " பொருளான் „

குறிப்பு

யாப்பாவது—பலவகைச் சொற்களால் பொருள்படும்படி புலவர்களால் அழகுபெறப் பாடப்படுவது. யா - பகுதி, பு - தொழிற் பெயர் விகுதி ; தொழிலாகுபெயராய்ச் செய்யுளைக் குறிக்கும். கவி, செய்யுள், தூக்கு, தொடர்பு, பா, பாட்டு, யாப்பு முதலியவை ஒரு பொருட் சொற்கள்.

குறள் வெண்பா—	இரண்டடியாய் (2 lines) வருவது.
சிந்தியல் வெண்பா—	மூன்றடியாய் (3 lines) „
நேரிசை வெண்பா இன்னிசை வெண்பா	நான்கடியாய் (4 lines) „

23 APR 1921

Copies can be had at :—

(i) The "Ananda Bodini" Press,
Venkatesa Maistry St. Sowcarpet, MADRAS.

(ii) Messrs P. S. Champion & Co.,
Villivakkam, P. O.
(CHINGLEPAT DIST.)